# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 57வது கூட்டறிக்கை 2022.11.15

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 57வது அமர்வு 2022.11.15 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம்.நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 10. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 19. திருமதி.கே.குலமணி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 20. ஜனாப்.ஏ.எச்.அன்வர் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி.ஏ.பீ.ஏ.சஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 57வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

சபை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முதல் நமது பொது மக்கள் பார்வைக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் மூவர் எனது அனுமதியோடு அமர்ந்திருக்கின்றார்கள். சபையின் ஆட்சேபனை இல்லாவிடின் அவர்கள் தொடர்ந்து இருப்பதற்கான சபையின் அனுமதியை கேட்கின்றேன்.

இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

கூட்டறிக்கை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சென்ற வாரம் வெள்ளிக் கிழமை நமது தேர்தல் ஆணையாளர் அவர்கள் இந்த மாவட்டத்தை சேர்ந்த ஏறத்தாள 100 பேரை கச்சேரிக்கு அழைத்திருந்தார். அதில் தவிசாளர்கள், சில கௌரவ உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். எமது சபையில் இருந்து கௌரவ உறுப்பினர் சிஹாமா, கௌரவ உறுப்பினர் குலமணி ஆகியோர் பங்குபற்றியிருந்தார்கள். அத்துடன் சமூக அமைப்புகள், பாடசாலை பிரதிநிதிகள், பல்கலைக்கழக பிரதிநிதிகள் என்று 100 பேர் கலந்துகொண்டார்கள். அந்தக் கூட்டத்தில் பகிரப்பட்ட பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 175 இதன் பிரதிகள் உங்களுக்கு தரப்பட்டிருக்கின்றது. இது தேர்தல் சட்டங்கள், தேர்தல் முறைமை தொடர்பாக பொருத்தமான சீர் திருத்தங்களை அடையாளங் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவின் அறிக்கை.

இந்த அறிக்கையின் படி தேர்தல் ஆணைக்குழு கிட்டத்தட்ட 35 அவதானிப்புக்களில் சுருக்கி 25 அவதானிப்புகள் அந்த குழுவிடம் சமர்ப்பித்திருக்கின்றார்கள். அதில் 15 விதந்துரைகளை மக்களின் ஆலோசனைகளுக்காக முன்வைத்திருக்கின்றார்கள். அதில் உள்ளூராட்சி தேர்தல் முறை, மாகாண சபை தேர்தல், பாராளுமன்ற தேர்தல், பெண்களின் பிரதிநிதித்துவம், இளைஞர் பிரதிநிதித்துவம், அரசியல் கட்சிகளின் அங்கீகாரம், ஊடகம், தேர்தல் பிரச்சாரம், வாக்களிக்கும் உரிமை, நியமன செயல்முறை, தேர்தல் செயன்முறை, ஒரு தேர்தல் தீர்ப்பாயம், தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் உள்ளூராட்சி அதிகார சபைகள் மற்றும் மாகாண சபைகளின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் நிறைவேற்றுதல், வருடாந்த வரவு செலவுத் திட்டத்திற்கு உள்ளூர் அதிகார சபையின் அங்கீகாரம் வழங்கப்படாமை, உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கு கள அலுவலர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு, தேசியப் பட்டியல், வரையறை. இதை ஏன் உங்களுக்கு சமர்ப்பிக்கின்றேன் என்றால் இந்த விடயத்தைப் பற்றி நீங்களும் பரிந்துரைகள் வழங்கலாம்.

இதில் முக்கியமாக பேசப்பட்ட விடயம் தேர்தல் முறை. கலப்பு முறையா? விகிதாசார முறையா? கலப்பு முறை என்றால் தொகுதிவாரியின் எத்தனை வீதம், விகிதாசாரப் பிரதிநிதித்துவம் எத்தனை வீதம் என்ற கருத்துகள் பரிமாறப்பட்டன. பரிமாறப்பட்ட கருத்துகளில் கலப்பு முறை தொடர வேண்டும், தொகுதிவாரி விகிதாசார முறை 60%, 40% இல் இருந்து 70%, 30% ஆக மாற்றப்பட வேண்டும் என்று கருத்துகள் முன்வைக்கப்பட்டன. என்னைப் பொருத்தமட்டில் கலப்பு முறை தொடர வேண்டும், வட்டாரங்களுக்கு பிரதிநிதிகள் இருக்க வேண்டும். ஆனால் விகிதாசார பிரதிநிதித்துவம் குறைக்கப்பட வேண்டும். வட்டாரங்களுக்கு முன்னுரிமை கொடுத்து ஆரம்ப பரிந்துரை போல் 70% 30% ஆக மாற்றப்பட வேண்டும். தெரிவு செய்யப்படும் சபை அல்லது பெரும்பான்மையான பிரதிநிதித்துவத்தை பெறும் கட்சிக்கு ஆளுவதற்கு ஸ்தீரத்தன்மை கொடுப்பதற்காக Bonus அங்கத்தவர்கள் வழங்கப்படுவது, அடுத்தது பெண் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதற்காக தேர்தலில் முன் வந்து வெற்றி பெறாத பெண் இளைஞர் பிரதிநிதிகளை விகிதாசாரப் பட்டியலில் முன்னுரிமை வழங்குவது சிலநேரம் 20%, 25% பெண் வேட்பாளர்கள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை கொண்டு வந்தால் அதில் அவர்கள் வெற்றிபெறாவிட்டால் பிரதிநிதித்துவம் இருக்காது. இந்த குறைபாட்டை விகிதாசார முறையில் வருகின்ற பிரதிநிதித்துவத்தில் பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும்,

அடுத்தது அரசியல் கட்சிகளின் அங்கீகாரம் தொடர்பில் எனது கருத்து அரசியல் கட்சிகள் அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆனால் அவர்கள் இரண்டு வருடத்திற்குள் எந்த அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடாவிட்டால் அவர்கள் அந்தப் பட்டியலில் இருந்து நீக்கப்பட வேண்டும். தற்போது 67 கட்சிகள் பதிந்திருக்கின்றது. முக்கியமாக நான் எடுத்துரைத்த விடயம் தேர்தல் பிரச்சாரம். பிரச்சார நேரத்தில் கௌரவ அமைச்சர்கள் அவர்களின் உத்தியோகபூர்வ வாகனங்களிலோ, அரச வாகனங்களிலோ தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடக் கூடாது. அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக பங்குபற்றலாமே தவிர அரமச்சர்களாக பவணியில் அரச வாகனங்களைக் கொண்டு வந்து பிரச்சாரம் உள்ளூராட்சி, மாகாண சபைத் தேர்தலில் ஈடுபடக்கூடாது என்று, நான் நினைக்கின்றேன் அதற்கு வரவேற்பு இருந்தது. இது தேர்தல் குற்றமாக கணிக்கப்பட வேண்டும் என்று, ஆளும் கட்சி அதை பாவித்தால் அவர்களுக்கு எதிராக தேர்தல் குற்றமாக கருதி வழக்கு தொடரப்படவேண்டும் என்று கூறினேன்.

வெளிநாட்டில் வேலை செய்பவர்கள், அவசர சேவைகளில் தொழில் செய்பவர்கள் எல்லோரும் முன்கூட்டியே வாக்களிக்கும் வசதிகள் செய்யப்பட வேண்டும் என்ற கருத்துகளை நான் முன்வைத்தேன். அவர்கள் அதை எழுத்து மூலம் அனுப்புங்கள் என்ற வேண்டுகோளை விடுத்தார்கள். அந்த சந்தர்ப்பத்தை உங்களுக்கும் வழங்குவதற்காக இந்த அறிக்கையை உங்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இது சம்மந்தமாக யாருக்கு அறிக்கை செய்வது? தேர்தல் ஆணையாளருக்கு அறிக்கை செய்வதா? அல்லது தனித்தனியாக அறிக்கை சமர்ப்பிப்பதா? அல்லது சபையில் எல்லோரும் சேர்ந்து அறிக்கை செய்வதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் தனித்தனியாக அறிக்கை செய்யலாம்.

Delimitation Commission பிரதேச சபை உறுப்புரிமை அல்லது எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்ற ஒரு அரசாங்கத்தின் வேண்டுகோளில் எல்லை நிர்ணய Commision உருவாக்கப்பட்டிருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கௌரவ உறுப்பினர்கள், சிவில் அமைப்புகள், நமது சபையின் எல்லைகளை மாற்றியமைக்க வேண்டும் என்றால் அந்த பரிந்துரைகளை நீங்கள் தனித்தனியே செய்யலாம். அல்லது இந்த சபை முடிவு எடுத்தால் சபையின் கூட்டு முயற்சியாகவும் செய்யலாம். அதை கௌரவ உறுப்பினர்களின் தீர்மானத்திற்கு விடுகின்றேன். சென்றமுறை எனக்கு தனிப்பட்ட முறையில் குற்றச்சாட்டுகள் கூறப்பட்டது. இன்றும் அது பேசப்படுகின்றது. அதனால் இந்த சந்தர்ப்பத்தை நீங்கள் பாவித்து அவர்கள் என்ன நோக்கோடு செய்கின்றார்களோ அந்த நோக்கத்தை உள்வாங்கியதாக உங்களின் பரிந்துரைகளை செய்தால் நிச்சயமாக அந்த மாற்றங்களை கொண்டு வரலாம்.

அரசாங்கத்தின் நோக்கம் வட்டாரங்களை குறைக்க வேண்டும் என்ற நோக்கம் இருந்தாலும் சம்மாந்துறையைப் பொருத்தமட்டில் என்னைப் பொருத்தமட்டில் ஆகக் குறைந்தது இன்னும் 2 வட்டாரங்கள் கூட்டப்படலாம். அந்த நேரம் ஒரு வரையறை இருந்தது 10 இற்கு மேல் கூட்ட இயலாது என்று, ஏற்கனவே 09 அங்கத்தவர்கள் இருந்ததை 12 அங்கத்தவர்களாக மாற்றியும் வட்டாரங்கள் 10 இற்கு மேல் கூடக்கூடாது என்று இருந்தது. அதை இந்த சந்தர்ப்பத்தில் கௌரவ உறுப்பினர்கள் அமைப்புகள் மூலம் உறுப்பினர்களாகவும் மாற்று யோசனைகளை எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு காலம் கடத்தாமல் சமர்ப்பிக்கலாம் என்று தெரிவிப்பதோடு, நமது LDSP வேலைத்திட்டத்தின் கீழ் பழைய மார்க்கட் கடைகளில் ஒரு பகுதி திருத்தப்பட்டு உரியவர்களுக்கு மீள கையளிக்கப்பட்டிருக்கின்றது. அதே நேரம் நமது கட்டிடத்தின் மேல் Solar Panel பொருத்துவதற்கும், வீரமுனை சிறுவர் பூங்கா வேலைகளும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றது. அதே போல் நமது வீரமுனை வாசிப்பு நிலையம் இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் 25 ஆந் திகதி எல்லோரும் சேர்ந்து திறப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

நமது நிதி நிலமை 10ம் மாதம் முடிவுக்குள் சொந்த வருமானமாக மதிப்பிட்டதில் 48% இனை அடைந்திருக்கின்றோம். அதாவது 42.1 மில்லியன் வருமானமாக பெற்றிருக்கின்றோம். அதே வேளை 50.7 மில்லியன் நாம் செலவளித்திருக்கின்றோம். ஏறத்தாள வருமானத்திற்கு மேலாக 20 இலட்சம் செலவளிக்கப்பட்டிருக்கின்றது. இன்றய நிதி நிலமை கொவிட் இனால் சென்ற வருடத்தின் வருமானத்தில் 8 மில்லியன் மீள அளிக்க வேண்டியதாக இருக்கின்றது. தற்போதய கையிருப்பு 24.7 மில்லியன். இன்றய செலவீனங்களின் படி பார்த்தால் 04 மாதம் வரை சபையை நடத்தக்கூடிய செலவீனம் இருக்கின்றது.

அடுத்ததாக சென்ற மாதத்தின் செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம். இல்லாவிடில் அதனை ஆமோதிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 156 பொலீஸ் திணைக்களத்தின் சினேகபூர்வ கிறிக்கட் போட்டியில் பங்குபற்றியவர்களுக்கான கொடுப்பனவு ரூபா 8632.00

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கொடுப்பனவு அல்ல அது செலவு.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதே தலைப்பின் கீழ் இலங்கை பொலீஸ் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிறிக்கட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றியவர்களுக்கான விளையாட்டு உபகரணப் பொருட்கள் கொள்வனவு செய்த கொடுப்பனவு ரூபா 32,250.00 ஆகும். கிட்டத்திட் ரூபா 40,000.00 ஒரு போட்டி விளையாடுவதற்காக செலவளிக்கப்பட்டிருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அதன் விபரங்களை எடுத்துப் பார்ப்போம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 2022.10.14 ஆந் திகதி சிரமதானத்தின் போது நடுவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட பழமரக் கன்றுகளுக்கான கொடுப்பனவு வழங்கல் ரூபா 7460.00 சிரமதானம் எப்போது? எங்கே? நடைபெற்றது. ஏன் எங்களுக்கு அறிவிக்கவில்லை? நாங்கள் சபை அங்கத்தவர்கள் எங்களுக்கு தெரியாமல் ஒரு சிரமதானப் பணி நடக்கின்றது என்றால் எங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சபை உறுப்பினர்கள் எல்லோருக்கும் அறிவிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களுக்கு அறிவிக்கப்படவில்லை. அதனால்தான் இந்தக் கேள்வியை கேட்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, குறித்த தினத்தில் இடம்பெற்ற சிரமதானமானது அந்த பிரதேசத்தின் மக்கள் பங்களிப்புடன் முற்றுமுழுதாக சபையினுடைய பங்களிப்பு அல்ல. அந்தப் பிரதேசத்தின் மக்கள் பங்களிப்புடன் இளைஞர் அமைப்புக்கள், சமூக அமைப்புக்கள் முன்வைத்து செய்யப்பட்ட சிரமதானம். ஆனால் முறையாக எழுத்து மூலம் சபைக்கு வழங்கப்பட்டு மரக்கன்றுகளும், அதை பாதுகாப்பதற்கான கூடுகளையும் கேட்டிருந்தோம் அந்த அமைப்பின் ஊடாக நான் எனது பிரத்தியோக கடித தலைப்பிலே எழுத்துமூலம் சபைக்கு வழங்கியிருந்தேன். ஆனால் தனிப்பட்ட முறையில் என்னுடைய முயற்சியில் செய்யப்பட்ட வேலை அல்ல. என்னை மட்டும் வைத்து செய்யப்பட்ட வேலையும் அல்ல. சபைக்கு முறையாக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்ட வேலை. அந்த இடத்தை துப்பரவு செய்ய வேண்டும் என்பதற்காக பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கிணங்க அவ் வேலைத்திட்டம் நடைபெற்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அங்கு சென்று பார்த்தால் 30 கூடுகளில் 10 கூடுகள் தான் சபையால் வழங்கப்பட்டது. ஏனையவைகள் எல்லாம் மக்களின் பங்களிப்பு. கூடுதான் உண்மையான செலவீனம். கிட்டத்தட்ட 04, 05 கழகங்கள் வந்து செய்யப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, செய்த சிரமதானத்தை குறைகூறவில்லை. நூறு வீதம் உடன்படுகின்றேன். ஏன் எங்களுக்கு அறிவிக்கப்படவில்லை என்பதுதான் எனது குற்றச்சாட்டு.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
என்னைப் பொருத்தமட்டில் அது அறிவிக்கப்பட்டதாகத்தான் நினைக்கின்றேன். அறிவிக்காவிட்டால் அது உண்மையான ஒரு குறைபாடு. அது நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

**தீர்மானம் - 04/57/01**
சென்ற மாதம் 2022.10.01 தொடக்கம் 2022.10.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர்.வளர்மதி |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/57/02**
மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகளை மேன்படுத்தலில் பிரதான அலுவலகத்தில் "Wheel Chair" ஒன்றினை கொள்வனவு செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ.எம்.சஹீல் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.
**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இளைஞர் வலுவூட்டல் திட்டத்தின் கீழ் கொரிய மொழிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்ட போதனாசிரியருக்கு கொடுப்பனவு வழங்குதல். இந்த நிகழ்ச்சித் திட்டம் இன்ஷா அல்லாஹ் அடுத்த வாரம் ஆரம்பிப்பதற்கு உள்ளது. எல்லோருக்கும் அழைப்புகள் விடுக்கப்படும். அந்த நிகழ்வில் எல்லோரும் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கொடுப்பனவு எவ்வளவு என்பது தெரிய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஒரு மணித்தியாலயத்திற்கு 750.00 ரூபா. கொரியா மொழிக்கு 40,000.00 ரூபா, 50,000.00 ரூபா கொடுத்து செய்கின்றார்கள். இவர் நமது ஊரை சேர்ந்தவர் என்ற படியினால் ஒரு மணித்தியாலயத்திற்கு 750.00 ரூபா எடுக்கின்றார்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஒரு நாளைக்கு எத்தனை மணித்தியாலயம்?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஒரு நாளைக்கு 2 மணித்தியாலயம். மொத்தமாக 150 மணித்தியாலயங்கள் தொடர்ச்சியாக நடைபெறும்.

### தீர்மானம் - 04/57/03
இளைஞர் வலுவூட்டல் திட்டத்தின் கீழ் கொரிய மொழிப் பயிற்சியினை இலவசமாக நடாத்துவதற்கும், போதனாசிரியருக்கு பயிற்சிக் காலம் முடியும் வரை (150 மணித்தியாலயம்) ஒரு மணித்தியாலயத்திற்கு 750.00 ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.குலமணி |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/57/04
ZB – 0356 இலக்க Compactor இனை திருத்தம் செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எச்.அன்வர் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/57/05
LI – 3269 இலக்க Compactor இனை படிப்படியாக முழுமையாக (Overall) திருத்தம் செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/57/06
01 Ton Roller இன் என்ஜின் திருத்தம் செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ.எம்.சஹீல் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/57/07

PD – 1845 இலக்க Cab வாகனத்திற்கு புதிய மின்கலம் கொள்வனவு செய்வதற்கும், Stering மற்றும் Break Line திருத்தம் செய்வதற்குமான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர்

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பெண்கள் வலுவூட்டலின் கீழ் வளத்தாப்பிட்டி கிராமத்தில் பெண்கள் சுய தொழில் முயற்சியில் சென்ற சனி, ஞாயிற்றுக் கிழமை பயிற்சிகள் நடைபெற்றது. அதில் நானும் பங்குபற்றினேன். அந்த அமைப்புகளுக்காக நமது பெண் கௌரவ உறுப்பினர்கள் கொடுத்த வேலைத்திட்டத்தின் கீழ் அதை அவர்கள் ஆரம்பிக்கும் முகமாக தேவையான ஒரு இலட்சத்திற்கு குறைந்த அளவுக்கு மூலப் பொருட்களை கொள்வனவு செய்து வழங்குவதற்கான அங்கீகாரம்.

## தீர்மானம் - 04/57/08
பெண்களை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வளத்தாப்பிட்டி வில் கழகத்தின் பெண்கள் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு 06 மாதங்களுக்கு இலவசமாக வளத்தாப்பிட்டி பொதுச் சந்தை தொகுதியினை வழங்குவதற்கும், ஒரு இலட்சம் ரூபாவுக்கு குறைந்த தளபாட ஏற்பாடுகளை செய்து சபையின் சொத்தாக பராமரிப்பதற்கும் மற்றும் அங்கு புதிய மின் இணைப்பு, நீர் இணைப்பு பெறுவதற்கும் மலசலகூடம் அமைப்பதற்குமான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சென்னல் கிராமம் - 01 இல் அல் ஹம்ரா 7ம் வீதி இறங்குகின்ற இடத்தில் மிகவும் மோசமாக இருக்கின்றது. ஒரு வாகனம் சென்று திரும்ப இயலாது. ஒரு 20 மீற்றருக்காவது மண் கழுவிச் செல்வதை நிறுத்துவதற்கு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும். கிட்டத்தட்ட 5 இலட்சம் தேவைப்படும். அந்த வேலையை செய்ய வேண்டும்.

## தீர்மானம் - 04/57/09
சென்னல் கிராமம் - 1 இல் அல் - ஹம்ரா 7ம் வீதியில் 20m தூரமான வீதியை திருத்தம் செய்வதற்கும், மடுவத்திற்கு முன்னால் உள்ள 3 மீற்றர் மதகு அமைப்பதற்குமான தீர்மானம்.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட்

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இன்றய பிரதான அம்சம் நமது 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம். இது 05 ஆந் திகதி கௌரவ உறுப்பினர்கள் எல்லோரும் கலந்துரையாடி குறிக்கப்பட்ட மாற்றங்கள் செய்யப்பட்டு உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. எமது சபையை பொருத்தமட்டில் கௌரவ தவிசாளர் உட்பட கௌரவ உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு, நிரந்தர ஊழியர்களுக்கான சம்பளம் மட்டும்தான் அரசிடம் இருந்து பெறப்படுகின்றது. தற்காலிக ஊழியர்களுக்கான சம்பளமானது சபையின் சொந்த வருமானத்தில் இருந்தே செலுத்தப்பட வேண்டும். மட்டுமன்றி பிரமான அடிப்படையிலான குறித்தொதுக்கப்பட்ட நன்கொடைகள் மூலமான வேலைகள் தவிர்ந்த ஏனைய செலவுகள் அனைத்தும் சபையின் சொந்த வருமானத்தில் இருந்தே மேற்கொள்ளப்பட வேண்டும். 2023 ஆம் ஆண்டுக்கான பாதீட்டை தயாரிப்பதில் அரசின் அறிவுரைப்படி கட்டுமான வேலைகள் இயன்றளவு குறைக்கப்பட வேண்டும். சொத்துக்களை கொள்வனவு செய்யாமல் ஏற்கனவே உள்ளவற்றை உச்ச அளவில் பயன்படுத்துதல், தளபாட உபகரணங்களை கொள்வனவு செய்வதனை இயன்றளவு குறைத்தல். எரிபொருளினை சிக்கனமாக பயன்படுத்துதல், மின்சாரத்தினை சிக்கனமாக பயன்படுத்துதல், நீர்ப்பாவனையை சிக்கனமாக பயன்படுத்துதல், தொலைபேசி கட்டணத்தை குறைத்தல், காகிதாதிகளை

சிக்கனமாக பயன்படுத்துதல், போக்குவரத்து செலவினை குறைத்தல் போன்ற சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

நாட்டின் மக்களின் மெய் வருமானமும் குறைவடைந்துள்ளது. இந் நெருக்கடியான சூழ்நிலையில் சபையின் சொந்த வருமானத்தினையும், அரசின் கொள்கையினையும், மக்களின் மெய் வருமானத்தினையும், நிலைபேறான அபிவிருத்தி கொள்கைகளையும் அடிப்படையாகக் கொண்டே இந்த பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கின்றது. இதன் அடிப்படையில் எமது சபையின் 2023 ஆம் ஆண்டின் சொந்த நிதி மூலங்களில் இருந்தான பிரதான வருமானங்கள் ஆதன வரி 7 மில்லியன், பிரதேச சபை எல்லைக்குள் நீண்டகாலமாக பராமரிக்கப்படாது கைவிடப்பட்டுள்ள நிலையில் காணப்படும் காணிகள் அறவீடாக 01 மில்லியன், கடந்த வருடத்திற்கான முத்திரைத் தீர்வு, நீதிமன்ற தண்டப்பணம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் நிதியாண்டில் 27.1 மில்லியன் மதிப்பிடப்பட்டுள்ளது. சந்தைக் கடை வாடையாக 4 மில்லியன். இறைச்சிக் கடை வாடகையாக 20.1 மில்லியன். பொதுச் சந்தை குத்தகை மூலம் பெறப்படும் வருமானமாக 8.2 மில்லியன். விளையாட்டுக் கட்டிடத் தொகுதி, அப்துல் மஜீட் மண்டபம் என்பவற்றை வாடகைக்கு விடுவதன் மூலம் 9 மில்லியன். மிருக அறுவைக் கூடம், ஏனைய மிருகங்கள் அறுவைக் கட்டணமாக 1.5 மில்லியன். Bachko, Motor Grader வாகனங்கள் மூலம் கிடைக்கும் வருமானங்கள் 2 மில்லியன். UDA தண்டப்பணமாக 2 மில்லயன். மொத்தமாக நமது கட்டுப்பாட்டுக்குள் அதுவும் 27.1 மில்லியனை கழித்தால் நமது வருமானமாக உள்ளது 61.5 மில்லியன் இதில் பிரதான செலவுகளாக 31 மில்லியன் ஊழியர் சம்பளமாகவோ செல்கின்றது.

அத்தோடு பொதுமக்களுக்கு சேவைக்கு தேவையான எரிபொருள் 12.5 மில்லியன், மின்சாரம், தொலைபேசி, பத்திரிகைகள் 2.25 மில்லியன், உபகரணங்கள் கொள்வனவு 3.5 மில்லியன். கட்டுமானத்திற்குரிய Allocation இல்லாமல் 52.4 மில்லியன் அடிப்படை செலவுகளுக்கு தேவை. 61 மில்லியனை சேர்த்து எடுத்தாலும் 52 மில்லியன் நமக்கு எந்த வகையிலும் குறைக்க இயலாத கட்டாய செலவு. எம்மை காப்பாற்றுவது முத்திரை தீர்வும், நீதிமன்ற தண்டப்பணமும் தான். அது நமது கையில் இல்லை. இவ்வளவு காலமும் நாம் எதிர்பார்த்த அளவுக்கு 80%, 90% வீதம் வந்திருக்கின்றது. சமூக வலுவூட்டல் என்ற ரீதியில் 30 இலட்சம் ரூபா உங்களின் வேண்டுகோளுக்கிணங்க மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் இந்த வரவு செலவுத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் யதார்த்த நிலை உங்கள் எல்லோருக்கும் தெரியும். சென்ற வருடத்தின் வரவு செலவுத் திட்டத்தில் இருந்து நாம் 48% வருமானங்களை பெற்றிருந்தும்,

உங்களின் ஆதரவோடு நமது நிதிக் கட்டுப்பாட்டினால் 10 மாதங்கள் கடந்து 11வது மாதம் எவரிடமும் மன்றாடாமல் இந்த சபையின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முக்கியமாக திண்மக் கழிவகற்றல், நீரிழிவு தினத்தில் நடைபவணி ஆரம்பிக்கின்ற இடத்தில் ஊர் பிரமுகர்கள் சிலர் வந்திருந்தார்கள். அவர்கள் எல்லோரும் எம்மை பாராட்டியது சம்மாந்துறையின் திண்மக்கழிவகற்றல் சில குறைபாடுகள் தனியாரின் கருத்துகள் இருந்தாலும் பெரும்பாலான இடங்களில் அது ஒழுங்காக நடைபெறுகின்றது. அதுதான் நமக்கு பாரிய சுமையும், நற்பெயரை கொண்டு வருவதும் அதுதான். அந்த ஊழியர்களுக்கு உங்கள் சார்பில் இந்த சபை சார்பில் நன்றி கூற வேண்டிய நேரம். சிவில் அமைப்புகள் அவர்களை பாராட்டி அவர்களுக்கு உபசரணங்கள் செய்திருக்கின்றார்கள். நாமும் நமது பெயரைக் காப்பாற்றி வரும் ஊழியர்களுக்கு நன்றி செலுத்த வேண்டியது நமது கடமை ஆகும். இன்றைக்கு ஆளங் குளத்திற்கு சென்று பார்த்தீர்களானால் அவ்விடம் மிகவும் மோசமான இடம். இன்னும் ஒரு 06 மாதத்தில் குப்பை கொட்டுவதற்கு போராடுகின்ற நிலமை வரும். தற்போது இருக்கின்ற நிதி நான் முன்பு கூறியது போல் 4 மாதம் சபையை கொண்டு செல்லலாம். நமது நிர்வாகத்தில் இருக்கும் சபை மக்களிடம் அல்லது அரசிடம் நிர்வாகத்தை பாரம் கொடுக்கும் போது அதை நடத்தக்கூடிய பண வசதியை ஏற்படுத்திவிட்டு போக வேண்டும் என்பது உங்கள் எல்லோரினதும் கருத்து. நீங்கள் தனிப்பட்ட முறையில் என்னை விமர்சித்தாலும் பாரம்பரியம் தொடர வேண்டும் என்று கேட்டு, இந்த வரவு செலவுத் திட்டத்தை உங்களின் அங்கீகாரத்திற்காக நான் முன்மொழிகின்றேன். ஏதாவது கருத்துகள் அல்லது எதிர்ப்புகள் இல்லாவிடின் சிலவேளை இது இறுதியான வரவு செலவுத் திட்டமாக இருக்கலாம். எனது பணிவான வேண்டுகோள் நாம் இவ்வளவு காலமும் செய்தவாறு இதை நீங்கள் ஏகமனதாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள். அதற்கு மாற்றுக் கருத்துகள் இருக்குமாயின் நீங்கள் தெரிவிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களுடைய இந்த சபையானது தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் ஏகமனதாக எங்களுடைய வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றி இருக்கின்றோம். இது இந்த பிராந்தியத்திற்கே முன்மாதிரியாக திகழ்கின்றது. இதற்கு முன்னரும் பல தடவைகள் நான் கூறியிருக்கின்றேன் எங்களுக்கு அண்மையிலே இருக்கின்ற ஊர்களிலே நடக்கின்ற வரவு செலவுத்திட்ட

விவாதங்களிலே சென்று பார்த்தால் அல்லது அங்கே கிடைக்கின்ற தகவல்களை பார்த்தால் நாங்கள் உண்மையிலே பெருமைப்பட வேண்டும். பல்வேறு கட்சிகளை சேர்ந்த நாங்கள் இங்கே இருக்கின்றோம். எங்களுக்குள் கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் உடன்பட முடியாத பல நடவடிக்கைகள் இந்த வரவு செலவுத் திட்டத்திலே உள்ளீர்க்கப்பட்டிருந்தாலும் ஊரின் நலனை கருதி ஊரின் நற்பெயரை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக தொடர்ச்சியாக நாங்கள் ஆதரவு வழங்கி வருகின்றோம். இந்த முறையும் அதற்குரிய ஆதரவை நாங்கள் தொடர்ச்சியாக வழங்குவோம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
சில்வாடமடு வண்டுப்பாதை அமைப்பதுசம்பந்தமாக நான் நிறையப் பேசவேண்டுமென்று நினைத்திருந்தேன். ஆனால், நான் பேசியதற்குப் பிறகு தாங்கள் பேச வேண்டியதை, நான் பேசுவதற்குமுன் முன்கூட்டியே தாங்களே பேசிவிட்டீர்கள். இருந்தாலும், தங்களுக்குத் தெரியும் இந்த சபையில் கடந்தகாலங்களில் எத்தனையோ தீர்மானங்களுக்கு, பட்ஜட்களுக்கு, எவ்வளவு பிணக்குகள் இழுபறிகள், எதிர்ப்புகள் வந்தபோதிலும் இந்த ஊரின் மகிமை, தன்மானம், கௌரவம் போன்ற விடயங்களை நான் எடுத்துக்கூறி எங்களுடைய அனைத்து கௌரவ உறுப்பினர்களும் கட்சிவேறுபாடுகளுக்கப்பால் ஏகமனதான ஒப்புதலைத் தந்திருக்கின்றோம். ஆனால், இன்றைய தினம் 2023ஆம் ஆண்டுக்கான பஜட்டை எதிர்ப்பது என்று எண்ணித்தான் இங்கே வந்திருந்தேன். ஆனாலும்,

இந்த ஊரின் மகிமை கௌரவங்களை எண்ணியவனாக இந்த பஜட்டுக்கு ஆதரவளிக்கின்றேன். ஏனென்று சொன்னால், எனது மனதில் அவ்வளவு ஆதங்கங்கள், மக்களின் தேவைகளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு முயர்சித்தால், அரசஅதிகாரிகள் எங்களை மதிப்பதுமில்லை அந்த அரச அதிகாரிகளைக் கொண்டு வேலை செய்விக்கக் கூடிய அதிகாரத்திலுள்ள தவிசாளரோ பாராமுகமாக இருக்கின்றீர்கள். அப்படியென்றால், இந்த சபை எதற்காக? மாதாந்தம் இந்த சபையின் செலவுகளை அங்கீகரிப்பதற்காக மாத்திரம்தானா? மக்களுக்கு சேவைகள் செய்வதற்காக இல்லையா? அப்படியென்றால் இச்சபை தேவையில்லையென நினைக்கின்றேன்.

**தீர்மானம் - 04/57/10**
1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168 ஆம் பிரிவிற்கமைய சமர்ப்பிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தினை ஏற்றுக்கொள்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம்.மாஹிர் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/57/11**
PSDG – 2022 திட்டத்தின் கீழ் கைகாட்டி சிறுவர் பூங்காவில் Watcher Hut அமைப்பதற்கும் சபை நிதி மூலம் Electricity Connection பெறுவதற்குமான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாணி இருக்கின்றது. நடைமுறையில் எல்லோரும் தவிசாளர் நினைத்தால் செய்யலாம். இவர் நினைப்பதும் இல்லை, செய்வதும் இல்லை என்று கூறுகின்றார்கள். ஆனால் ஒன்று விளங்க வேண்டும். நாம் ஆளும் கட்சியை சேர்ந்தவர்கள் அல்ல. பொதுவாக கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களை தவிர மற்றவர்கள் எல்லோரும் அரசு தரப்போடு சேர்ந்தவர்கள் அல்ல. அதனால் நமக்கு ஓர் வரையறை இருக்கின்றது. நீங்கள் சொல்கின்ற குற்றச்சாட்டுகளை தனிப்பட்ட முறையில் சில வேளைகள் யோசிப்பது இதற்கு Publicity கொடுத்திருக்க வேண்டும் என்று வருந்துகின்ற நேரம் இருக்கின்றது. ஆனால் அதை செய்யாமல் நாம் இலக்கை அடைந்திருக்கின்றோம். குறிப்பாக கௌரவ உறுப்பினர் அஸ்பர் என்னோடு வளர்ந்த பிள்ளை ஆனாலும் அவரின் பாணி வேறு, என்னுடைய பாணி வேறு.

எனக்கு சில்வாட மடு பிரச்சினையில் என்னுடைய இலக்கு இருந்தது அந்த வாய்க்காலுக்கும் மையவாடிக்கும் இடையே உள்ள காணி உத்தியோகபூர்வமாக அரச காணி என்று பிரதேச செயலாளர் எழுத வேண்டும். அதை எழுத வைத்துவிட்டோம். எழுத்தில் இது அரச காணி என்று எழுதப்பட்டுள்ளது. இவ்வளவு காலமும் உத்தியோகபூர்வமாக யாருடைய காணி என்று இல்லை. தற்போது அரச காணியை மீட்டெடுப்பது அடுத்த கட்டம். அரச காணி என்று எழுதப்பட்டுள்ளது. அதை GA, Minister எல்லாரிடமும் கொண்டு செல்லலாம். அரச காணியை இவர்கள் அத்துமீறி வைத்துக் கொண்டு இருக்கின்றார்கள். அரச காணி என்று வந்தவுடன் நீர்ப்பாச திணைக்கள வீதி அமைப்பதற்கு யாரும் தடையாக வர இயலாது. நான் படித்த பாடம் Serveyor General சொன்னார் அரச காணி என்று இருந்தால் மாத்திரம்தான் எந்தவொரு நீரோட்டத்திற்கும் ஒரு Reservation வரும். அரச காணி அதோடு இருந்தால்தான். தனியார் காணிக்குள்ளால் ஒரு வடிகான் செல்லுகின்றது என்றால் அதற்கு ஒரு Reservation இல்லை. முதல் தேவைப்பட்டது இது அரச காணி என்று எழுத்து மூலமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று, வித்தியாசமான போக்குகளால் முரண்பாடுகள் வருவது.

மைதான விடயத்தில் எவ்வளவோ எதிர்ப்புகள் இருந்தும் நாம் அதை தொடர்ந்து போனதால் அவ்விடத்தில் இளைஞர்களின் ஈடுபாடு தொடர்ந்து இருக்கின்றது. இதுதான் நமது நோக்கம். நமக்கு பொது எதிர்ப்பு இல்லாமல் நாம் நமது விடயத்தை சாதிக்க வேண்டும். அதில் உங்களது ஆதரவு இல்லாமல் இவ்வளவும் அடைந்திருக்க இயலாது. எனக்கு அதிகாரம் தருவது நீங்கள்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பிரதேச செயலாளர் அவர்கள் அரச காணி என்று எழுதப்பட்டது எத்தனையாம் திகதிக்கு பின்னர்?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது ஆரம்பத்தில் இருந்து அரச காணி. இதை அரசியல் செல்வாக்கினால்தான் பிரதேச செயலாளர் ஒன்றும் செய்யாமல் வந்தது. அதன் பின்னர் 2014 ஆம் ஆண்டு றிப்னாஸ் Engineer ஆக இருக்கின்ற நேரம் அவர்களுக்கு எதிராக வழக்கு போடப்பட்டது. வழக்குப் போட்டவுடன் நீர்ப்பாசன திணைக்களத்தில் இருக்கின்ற படத்தின் படி அவ்விடத்தில் ஒரு மடு இல்லை. அதை வைத்து அந்த வழக்கை தள்ளுபடியாக்கப்பட்டது. நீங்கள் அவதானித்திருப்பீர்கள் என்னுடைய போராட்டம் இருந்தது காணியைப் பற்றி இல்லை. விடுபட்ட பாதை தொடர வேண்டும். வீரகொடயில் இருந்து சில்வாட மடு வரைக்கு இரண்டு பக்கமும் வந்த வீதி அந்த இடத்தில் மாத்திரம் வீதி இல்லை. அதனால் இந்த வாய்க்கால் பாதுகாக்கப்படுகின்றது இல்லை என்ற நோக்கம் தான். தற்போது முதல் தடவையாக எழுத்து மூலம் பிரதேச செயலாளர் இது அரச காணி. நீர்ப்பாசன திணைக்களத்திற்கு இதை காட்டுங்கள் என்று, அந்த வீதி போடப்பட்டால் எஞ்சிய அரச காணியை என்ன செய்வது என்று பிரதேச செயலாளர் தீர்மானிக்க வேண்டும். அதில்தான் நமது பங்களிப்பு வரும்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
சில்வாடமடு வண்டு அமைக்கும் வேலைகள் தொடரப்பட்டு சுமார் 100m தூரம் வேலை செய்து கொண்டிருக்கும்போது 3 நாட்களின் பின் அதாவது, 2022–10–07ஆம் திகதி தனிப்பட்ட ஒருவரின் குடியிருப்பு காணி S-வாய்க்காலுக்குரிய ஒதுக்கு காணிக்குள் அமைந் திருக்கிறதாம் என்று ஒரு அனுமதிப் பத்திரத்தைக் காட்டி கூறியதும், இந்தகாணிவிடயத்தை I.E யிடம் எத்திவைத்தேன். காணிவிடயம் சம்பந்தமாக D.S.தான் பார்க்கவேண்டும் எனக்கு அதுசம்பாந்தமான அறிவு இல்லை என்றும், என்னுடைய கடைமையானது தண்ணீர் திறப்பதும் பூட்டுவதும்தான் என்றும் நாசூக்காக கூறிவிட்டுச் சென்றார் I.E. அதன் பின்னர்,

D.S அவர்களுக்கு இவ்விடயம் சம்பந்தமாக எத்திவைத்த உடனேயே அன்றையதினம் வெள்ளிக்கிழமை பி.ப 3.00மணியளவில் D.S ஹனிபா, D.L.O முஸம்மில், L.O ஸவாஹிர், மற்றும் L.D.O ஹமீஸ் ஆகியோர்கள் உரிய இடத்திந்கு நேரடியாகவந்து பார்வையிட்டு, மைய்யவாடி மதிலுக்கும், இரிக்கேஷன் வாய்க்காலுக்கும் இடையில் யாருக்கும் காணியில்லை. இவ்விடத்திற்கு அனுமதிப்பத்திரம் வழங்கியது யாரென்று பார்ப்போம் இன்ஷாஅல்லாஹ் திங்கட்கிழமை இதற்கானமுடிவொன்றைச் சொல்கின்றோம். என்று கூறிவிட்டுச் சென்றார்கள்.

நீர்ப்பாசன திணைக்களமும் பிரதேசசெயலகமும் சேர்ந்து ஒருதீர்வினைத் தரும்வரைக்கும் 2022–10–07ஆம் திகதி வண்டு அமைக்கும் வேலைகள் இடைநிறுத்தப்பட்டது.

அதன்பின், 2022–10–10ஆம் திகதி திங்கட்கிழமை பிரதேச செயலகம் சென்று பிரதேச செயலாளரை சத்தித்தவேளையில், எதிராளிகள் காட்டிய அனுமதிப்பத்திரம் உண்மையா னதுதான் ஆனால், குறித்த இடத்திற்கு உரியதுதானா? என்று விசாரணை செய்ய வேண்டும் கொஞ்சம் காலஅவகாசம் தேவைப்டும்

என்றார். குறித்த அனுமதிப்பத்திரம் உண்மையென்று கூறுகிறீர்களே, 1989ஆம்ஆண்டு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் எழுத்துவடிவம் இன்றைய நிலையில் எப்படியிருக்கும் என்றவிபரம் தங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அதுமட்டுமல்ல, 1989ஆம்ஆண்டு இந்தஊரே அகதி முகாம்களில் இருந்து கொண்டிருந்த காலகட்டத்தில் இவர்களுக்கு மாத்திரம் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக் கிறதல்லவா? என்று கேட்டதற்கு, இங்கே றெகோட் இருக்கின்றதே என்றார் D.S. ஆம்! இருக்கிற றெகோட்டையும் எடுக்கலாம்–இல்லாத றெகோட்டையும் வைக்கலாம்தானே எல்லோரும் இறைவனுக்கு பயந்து கொள்ளுங் கள். என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். இவ்விடயம் சம்பந்தமாக அவ்வப்போது கௌரவ தவிசாளர் அவர்களுக்கு தொலைபேசி மூலம் அறிவித்துக்கொண்டேயிருந்தேன்.

சுமார் 600m நீளமுள்ள S-வாய்க்காலின் சில்வாட மடு வண்டுப்பாதை அமைக்கும் வேலைத்திட்டமானது கடந்த ஒரு வருடங்களாகியும் முடிந்த பாடில்லை. இதை முடித்துவைக்கும் எண்ணமும் கவலையும் சம்மாந்துறைI.E மற்றும் சம்மாந்துறை D.S போன்றோருக்கு கிடையாது. இப்படியே இவர்களிருவரும் நொண்டிச் சாட்டுகளை முன்வைத்துக் கொண்டு காலத்தை இழுத்தடித்து அலைக்களிப்பதே இந்த அரச அதிகாரிகளின் நோக்கம் என்பது இதுவரை நடந்த நிகழ்வுகளிலிருந்து தெரியவருகிறது. அதாவது, இந்த அதிகாரிகள் குறிப்பிட்ட ஒருசில தனிநபர்களுக்கு சார்பாக நடந்து கொள்கிறார்கள். அத்தோடு

2022–10–18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மீண்டும் பிரதேச செயலகம் சென்று பிரதேச செயலாளரை சத்தித்தவேளையில் ''தயவுசெய்து அரசியல்வாதிகள் இங்கே வருவதை தவிர்த்துக் கொள்ளுங்கள் எனக்கு பிறஷுறுக்குமேல் பிறஷர் வந்து கொண்டே இருக்கிறது. நான் அரசியல்வாதிகளுக்கு சப்போட் பண்ணுகிறேனாம் என்று எதிராளிகள் என்னை குறைகூறுகிறார்கள்.'' என்று D.S என்னிடம் கூறினார்.

அதற்கு நான் சொன்னேன், இங்கே நாங்கள் அரசியல்வாதிகள் அல்ல மக்கள் பிரதிநிதிகள், மக்கள் எங்களுக்கு வாக்களித்து பிரதிநிதிகளாக்கியிருப்பது, இதுபோன்ற பிரட்சினைகளை இனம்கண்டு குறித்த அதிகாரிகளின் கவத்திற்கு எடுத்துச் சென்று சரியான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காகத்தான், இந்த இடத்தில் நான் மட்டுமல்ல வேறுஎந்த மக்கள் பிரதிநிதிகள் இதுபோன்ற பொதுப்பிரச்சினைகளை கொண்டுவந்தாலும் அது தங்கள் மனச்சாட்சியின்படி நியாயமானதாகவிருந்தால், கட்சிவேறுபாடுகளின்றி தாங்கள் உடனடியாக அப்பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கான துரிதநடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். என்றும், உங்களிடம் வருவதானால், எனது பதவியை இராஜினாமா செய்து விட்டு ஒரு பொதுமகனாக வரட்டுமா? என்று கேட்டுவிட்டு விடைபெற்று வந்துவிட்டேன்.

2022–10–20ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு C.E.I, I.E, மற்றும் D.S ஆகிய அரச அதிகாரிகள், குறித்த சில்வாட மடு இடத்திற்கு வரஇருப்பதாகவும் அவ்வேளையில் மக்களின் சார்பாக மக்களோடு மக்களாக மக்களின் பிரதிநிதிகளாகிய சம்மாந்துறை பிரதேச சபையின் கௌரவ. தவிசாளர் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் அவ்விடத்திற்கு சமூகமளிப்பதற்கான ஏற்பாடுகள் முன்கூட்டியே பேசப்பட்டு இருந்தது தாங்கள் அறிந்ததே. ஆனால், அவ்விடத்திற்கு வருகைதந்து மக்களோடுமக்களாக மக்களுடன் கூடிநின்றவர்கள் கௌரவ உறுப்பினர்கள் நாலு பேர் மாத்திரமேயாகும்:

நான் உட்பட கௌரவ உப தவிசாளர் A.அச்சி முஹம்மட், கௌரவ உறுப்பினர் A.L.M.ஜிப்ரி, கௌரவ உறுப்பினர் A.C.முஹம்மட் ஸஹீல், கௌரவ உறுப்பினர் M.S.சரீபா.அவர்கள் சபையடிக்கு சமூகம் கொடுத்தும், வாகனம் இல்லையென்று திரும்பிச் சென்றவிட்டார். அத்தோடு ஏனய கௌரவ உறுப்பினர்களும் வேலைப்பளுக்கள் காரணமாக சமூகம் கொடுக்கவில்லை என்பதோடு,

சபை வாகனத்தை கேட்பதற்கு தங்களுக்கும் செயலாளருக்கும் தொலைபேசியில் தொடர்பு கொண்டோம் பதில் இல்லை. அதன் பின்னர் CC இடம் பேசினோம் றைவர் ஆப்டே லீவு. வேறுஎந்த றைவரிடமும் வாகனம் கொடுக்க முடியாது என்றும் அரச அதிகாரிகள் போகின்ற பிரச்சினைக்கு அரசியல்வாதிகள் போகத் தேவையில்லையென்று தவிசாளர் சொல்லியிருப்பதாக செயலாளர்கூறியதாக CC என்னிடம் கூறினார். அதனால், சபையடிக்கு வருகைதந்த கௌரவ உறுப்பினர் சரீபா அவர்களும் வாகனம் இல்லாததால் குறித்த இடத்திற்கு வருகைதராமல் திரும்பிச் சென்றுவிட்டார்.

அப்படியிருக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டும் அறிவிப்பு இல்லாமல் கௌரவ. தவிசாளர் குறிப்பிட்ட களத்திற்கு வருகைதராதது ஏன்? அப்படி வந்திருந்தால், தாங்கள் C.E.I யிடம் இந்த S-வாய்க்காலுக்குரிய ஒதுக்குக்காணி றிஷிவேசன் எத்தனை மீற்றர் என்று கேட்டிருந்தால், அந்தஇடத்திலேயே கூறியிருப்பார்கள். எடு நாடாப்பெட்டியை அள 13மீட்டரா அல்லது 15 மீற்றரா என்று அந்த இடத்திலேயே தீர்வுகாணப் பட்டிருக்கும். இன்நேரம் வண்டு அமைக்கும் பணியும் முடிந்திருக்கும். இந்தவகையில், இந்த வண்டு அமைக்கும் பணி இழுபறியாகி காலதாமதமாவதற்கு தாங்களும் குறித்த இடத்திற்கு சமூகம் கொடுக்காததும் ஒரு ஒருகாரணம்.

பலமுறை தங்களுக்கு Call எடுத்தேன் Answer பண்ணவில்லை. பிறகு செயலாளருக்கு Call எடுத்தேன் அவரும் Answer பண்ணவில்லை. அதன்பிறகு I.E நவாஸ் அவர்களுக்கு Call எடுத்து எங்களுடைய

தவிசாளருக்கு சொல்லப்பட்டதா? என்று கேட்டேன், ஆம் சொன்னேன் என்றார். மேலும், ‘‘நான் வரத்தேவையில்லை நீங்கள் அரச அதிகாரிகள் சென்று பிரச்சினையை தீர்த்துவையுங்கள் வேண்டுமானால், எங்களுடைய தொழிநுட்ப உத்தியோகத்தர்களை அனுப்பிவைக்கிறேன்’’ என்று தவிசாளர் கூறியதாக I.E என்னிடம் சொன்னார்.

கௌரவ தவிசாளர் அவர்களே, தங்களுக்கு நன்றாகத் தெரியும் - குறித்த இடத்திற்கு சென்று அங்குள்ள பிரச்சினைகளை பார்வையிட வேண்டும் என்று இந்த சபையின் கௌரவ உறுப்பினர்கள் விரும்புகிறார்கள் என்பதுபற்றி. தாங்கள் I.E யிடம் தொலைபேசியில் கூறும்போது: நான் வரவில்லை எனது சார்பாக எங்களுடைய கௌரவ உறுப்பினர்களை அனுப்பி வைக்கிறேன் என்று அவ்விடத்தில் ஏன் கூறவில்லை?

அப்படியாயின் எம்மிடமும் அந்தகாரணங்களை தெரியப்படுத்தி எங்களையும் அங்கே போகவேண்டாம் என்று கூறியிருக்கலாம்தானே.

கௌரவ. தவிசாளர் அவர்களே, தாங்கள் I.Eயிடம் தொலைபேசியில் கூறியதுபோன்று அரச அதிகாரிகள் அந்த பிரச்சினைகளை தீர்த்துவைப்பதென்றால், எப்பவோ அப்பிரச்சினைகளை தீர்த்து வைத்திருக்க வேண்டும். அல்லது 2021 – 08 – 15இல் இந்த சில்வாட வண்டு அமைக்கும் பணியை எமதுசபை கவனத்தில் கொண்ட காலத்திலிருந்து ஒருவருடத்திற்கும் மேலாகிறது இற்றைவரைக்கும் அந்த அரச அதிகாரிகள் இப்பிரச்சினைகளை தீர்த்து வைத்திருக்க வேண்டும் அல்லவா? ஆனால் இந்த அரசஅதிகாரிகள் இப்பிரச்சினைகளை தீர்த்து வைக்கவே மாட்டார்கள் என்பதற்காகத்தான் இந்த ஊரில் உள்ளபிரச்சினைகளை இனம்கண்டு உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்காகத் தான் மக்கள் எம்மை மக்களின்பிரதிநிதிகளாக தெரிவு செய்துள்ளார்கள்.

கௌரவ. தவிசாளர் அவர்களே, தற்போது இந்த ஊரில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இல்லாத நிலையில் கௌரவ. தவிசாளர் அவர்கள்தான் பாராளுமன்ற உறுப்பினருடைய இடைவெளியை நிரப்பி பாராளுமன்ற உறுப்பினராக இயங்க வேண்டும். தவிசாளர் பதவியென்பது இந்தவூரின் நிறைவேற்று அதிகாரம் கொண்டது. ஆனால், நாங்கள் அப்படியல்ல, கௌரவ உறுப்பினர்கள் என்பது இந்த சபையில் மாத்திரம்தான். வெளியில் எந்த அரச அதிகாரிகளிடமும் ஏன், எந்த அரச உத்தியோகத்தர்களிடமும் எங்கள் பருப்பு வேகாது. தங்களின் பருப்பு நன்றாக வேகும். ஆனால், அதை வேகவைக்க நீங்கள் முன்வராதது ஏன்?

I.E கைகாட்டி குளத்தை தோண்டிய மண் சம்பந்தமாக விசாரணையொன்று நடைபெறப் போவதாகவும் அதற்கு இந்த சில்வாடமடு காணிப்பிணக்கில் ஈடுபட்டுள்ள சித்தீக் என்பவர் சாட்சியாக உள்ளார் என்பதற்காகவும், எதிர்காலத்தில் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பதற்காகவும், அதற்காக ஆள்சேர்ப்பதற்காக, I.E சித்தீக் என்பவருக்கு சாதகமாக செயல்படுகிறார். என்று மக்கள் மத்தியில் பரவலாக பேசப்படுகிறது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளரின் சகோதரர்கள் என்பதற்காக பிரதேசசெயலாளரும் அவர்களுக்கு சாதகமாக செயல்படுகிறார் என மக்கள் மத்தியில் பரவலாக பேசப்படுகிறது. அதாவது, 2022–10–07ஆம் திகதிய களவிஜயத்தின் போது D.S அவர்களால் பேசப்பட்ட பேச்சுக்கும் 2022–10–18 ஆம் திகதிய பேச்சுக்கும் இடையில் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகவே அமைகிறது. பிரச்சினையை D.S இன் கவனத்திற்கு கொண்டு சென்ற என்னையே ‘‘ அரசியல்வாதிகள் இங்கே வருவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்’’ என்று ஒரு பிரதேசசெயலாளர் சொல்லுகிறாரே என்றால், இதை என்னவென்று சொல்லுவது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நான் இந்தக் கடிதத்தை வாசிக்கின்றேன். பிரதேச செயலாளர் நீர்ப்பாசன பணிப்பாளர் அம்பாரைக்கு கடிதம் எழுதுகின்றார். சம்மாந்துறை பிரதேச எல்லைக்குள் கீழ் உள்ள புளக் ஜே மேற்கு – 01, மலையடிக்கிராமம் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளை கொண்ட நீர்ப்பாசன திணைக்களத்தின் பராமரிப்பில் உள்ள சில்வாட மடுவின் அண்மையில் பாதை அமைப்பது தொடர்பாக, சம்மாந்துறை பிரதேச சபையின் கடிதத்தின் மூலம் குறித்த பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் காணி சம்மந்தமான பிரச்சினைகள் எழும் பட்சத்தில் அதற்கான தீர்வினை பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அதனை தொடர்ந்து சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளரின் கடிதத்தின் மூலம் குறித்த இடத்தில் சம்மாந்துறை பிரதேச சபையுடன் இணைந்து பாதை அமைப்பதாகவும் குறிப்பிட்ட சில நபர்கள் குறித்த இடத்தில் அவர்களுக்கு காணி உள்ளதாக கூறி பாதை அமைக்கும் வேலையை இடைநிறுத்தியுள்ளதாகவும் அதனை பரிசீலனை செய்ய காணி அனுமதிப்பத்திரம் உடைய காணிச் சொந்தக் காரர்கள் உள்ளர் என பரிசீலித்து அறியத்தருமாறு கோரியுள்ளார். குறித்த பகுதியானது நில அளவை செய்யப்பட்டு CM 280, 277 மற்றும் CM 280, 207 எனும் வரைபடங்கள் காணப்படுகின்ற அரச காணியாகும்.

மேலும் பொதுமக்களும் அவ்விடத்தில் குறித்த பாதை தேவை என கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே குறித்த பகுதியில் மேற்கொள்ளப்படும் பாதை அமைப்பு வேலைகளுக்கு வாய்க்காலின் இரு புரமும் தங்களது நீர்ப்பாசன திணைக்களத்தினால் வாய்க்காலுக்காக ஒதுக்கப்படும் ஒதுக்கீட்டின் அளவை உடன் தெரியப்படுத்தும் பட்சத்தில் அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். குறித்த விடயம் தொடர்பில் தங்களின் துரித நடவடிக்கை என்று 2022.10.19 ஆந் திகதி பிரதேச செயலாளரினால் அனுப்பப்பட்டுள்ளது. கடிதம் அங்கு கிடைத்தவுடன் நான் அவரோடு இருந்து இதன் பிண்ணனிகள் இதை நீர்ப்பாசன திணைக்களத்திற்கும் பிரதேச செயலாளரினாலும் சாதிக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் சில விடயங்களை நேரடியாக எனது வாகன Log Book இனை எடுத்துப் பார்த்தால் எத்தனை தடவை DI இன் அலுவலகத்திற்கு சென்றிருக்கின்றேன் என்று, அவரிடம் சென்று விளங்கப்படுத்தி றிப்னாஸ் அவர்களையும் எடுப்பித்து தற்போது இருக்கின்ற நிலமை அவரின் பொதுவாழ்க்கையில் வருகின்ற பின்னனியினால் அவரின் தொழிலுக்கு சில சிக்கல்கள் வருகின்றது. Irrigation இற்கு புரம்பாக அரசியலைப் பற்றி யோசிக்கின்றார் என்ற ஒன்று வருகின்றது. அது மேல் இடத்திற்கும் தெரியும். அதை உத்தியோகபூர்வமாக வரைபடத்தோடு செய்து பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்கச்சொல்லியும் அது நடந்தவுடன் உத்தியோகபூர்வமாக இவ்விடத்தினால்தான் வரும் என்று Official ஆக நீர்ப்பாசனத்திணைக்களத்தில் இருந்து பிரதேச செயலாளருக்கு வரும்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த விடயத்தில் உண்மைத் தன்மை என்னவென்றால் கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் அழைத்ததற்கிணங்க பிரதேச சபைக்கு வந்து வாகனம் இல்லை என்று எனது பிரதேசத்து வாய்க்கால் சம்மந்தமாக கடிதம் கொடுப்பதற்காக நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சென்றிருந்தேன். Chief Engineer தொலைபேசி அழைப்பு ஒன்று எடுத்திருந்தார் நவாஸ் Engineer இற்கு அவர் பேசிய பேச்சில் எனக்கு விளங்கியது நீங்கள் அந்த இடத்திற்கு செல்லுங்கள் உறுப்பினர்கள் எல்லாரும் தேவையில்லை. அந்தப் பாதை ஏற்கனவே இருக்கபடாத ஒன்று அந்தப் பாதை அமைக்கின்ற பொறுப்பு பிரதேச செயலாளருக்கு இருக்கின்றது. அவர்தான் இதில் முக்கியமாக பங்களிக்க வேண்டும். நீங்கள் ஒருபக்க சார்பாக நடக்க வேண்டாம். பாதை அமைப்பதை அவர்கள் பார்கட்டும். பாலம் இடுவது தோன்றுவது விடயமாக நாம் ஒரு முடிவு கொடுப்போம் என்பதைப் பற்றி Chief Engineer பேசினார்.

அந்த நேரம் நவாஸ் Engineer சொல்கின்றார் இந்தப் பிரச்சினை தொடர்வதால் எனக்கு வளவு பேமிட் இல் பாதை இல்லை என்று சொல்கின்ற மாதிரியும் இருக்கின்றது. இந்தப் பாதைக்கு ஒருவரும் அவகாசம் கொடுக்கவும் இல்லை. உறுப்பினர் அஸ்பர் அவர்கள் தான் இந்தப் பிரச்சினையை எழுப்பி இருக்கின்றார். இதற்கு எப்படி முடிவு காண்பது. அந்த நேரம் தவிசாளருடன் தொடர்பு கொண்டு கதைக்க வேண்டும் என்று கேட்டதற்கு Chief Engineer சொன்ன ஒரு வார்த்தை பிரதேச செயலாளர் என்ன சொல்கின்றாரோ அதை கேட்டுத்தான் நாம் ஒரு முடிவு எடுக்க வேண்டும். பாதை அவ்விடத்தில் இருக்கின்றது என்பதையும் அரச காணி என்ற உத்தரவாதத்தையும் தந்ததற்கு பின்னர் நாம் செயற்படுவோம் என்று சொன்னது எனது காதில் கேட்ட விடயம். உண்மைத் தன்மை என்னவென்றால் பெரியவர்கள் எடுக்கும் முடிவுக்கு சிறியவர்கள் ஒரு வகையில் நசுக்கப்படுவார்கள். அரசியலில் இருப்பவார்கள் பலபக்கமும் நடிக்க வேண்டும் என்ற சந்தர்ப்பமும் இருக்கின்றதுதான். உறுப்பினர்கள் மதிக்கப்படுவதில்லை என்பது எப்பவோ தெரியும். இந்த சபையில் இருக்கின்ற உத்தியோகத்தர்களே மதிப்பதில்லை. மற்றவர்களை நாம் எப்படி சொல்வது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சில்வாட மடு பிரச்சினை மாதிரித்தான் எல்லாப் பிரச்சினையும் சென்று கொண்டிருக்கின்றது. S 22 இல் ஒரு Reservation இருக்கின்றது. அதற்கு முண்டுக்கல், வீடு உடைத்த கற்கள் கொட்டப்படுகின்றது. அது மிகவும் பிரயோசனமான காணி. S 22 பாய்ச்சல் வாய்காலில் இருக்கின்றது. இப்படியான நிலங்கள் அதிகமாக சுவீகரிக்கப்பட்டிருக்கின்றது. S 25 இல் இருக்கின்றது. S 13, S 15 இல் இருந்திருக்கின்றது. இவைகளுக்கு பேமிட் வழங்கப்பட்டுத்தான் இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் அவர்கள் சொன்னமாதிரி நெல்லிக்காட்டு வீதியில் இல்லாதவள் ஒரு பெட்டிக் கடை வைத்திருந்தார். அதை பொறியியலாளர் சென்று எழுப்பிவிட்டார். இல்லாதவளை எழுப்புகின்றார்கள். வசதி படைத்தவர்களுக்கு பக்கச்சார்பாக இருக்கின்றார்கள். இது எந்த விதத்தில் நியாயம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, தற்போது சொல்லப்பட்ட சில்வாட மடுவும் ஒரு குளம்தான். அது மயிலோடைக்கு பாய்ச்சலுக்கு வைத்த குளம்தான். S 15 இலும் இதே மாதிரி குளம்தான். அதையும் தனியார் பிடித்து வைத்திருக்கின்றார்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பழைய படங்களை பார்த்தால் எங்கு எங்கு குளம் இருந்தது என்று தெரியும். தற்போது கால்நடைகளுக்கு தண்ணீர் குடிப்பதற்கு ஆற்றை தவிர வேறு குளமே இல்லை.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எனது கருத்து அதற்கு வேலி இடப்படுகின்றது. அதற்கிடையில் சபை ஊழியர்களையும் உறுப்பினர் என்ற ரீதியில் நான் என்றாலும் அவ்விடத்தில் வேலியை இட வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Reservation எல்லாம் நமக்குரியது இல்லை. அது நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரியது. ஆனால் Reservation ஒன்று இருந்தால் கட்டுமான வேலைகள் நடந்தால் அதை நிறுத்திவிட்டு நீர்ப்பாசன திணைக்களத்திற்கு அறிவிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கட்டுமான வேலைகள் எதுவும் நடைபெறவில்லை. பறிபோவதற்கு இடையில் வேலியாவது இட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 04வது சபையின் 57வது கூட்ட அமர்விற்கான பிரேரணை என்னால் சமர்ப்பிக்கப்பட்டது. மக்களின் ஆட்சேபணைக்குரிய மீன் சந்தையினை ஒழுங்குபடுத்துதல். கௌரவ தவிசாளர் அவர்களே, எமது ஊரின் மீன் வியாபாரிகள் கண்ட கண்ட இடங்களில் மீன் சந்தைகளாக மாற்றி வியாபாரம் செய்து வருகின்ற விடயமும், இதனால் மீன் கொள்வனவு செய்ய விரும்பும் மக்கள் படும் துயரமும் தாங்கள் அறிந்திருப்பீர்கள். குறிப்பாக இச் சபையில் உள்ள அனைத்து கௌரவ உறுப்பினர்களும் அறியாமலும் இல்லை. கொரானா தொற்றின் உச்ச நிலை காணப்பட்ட காலத்தில் இத் தொற்றில் இருந்து மக்களை தடுப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட நடவடிக்கை காரணமாக இந் நிலை உருவானது என நான் நம்புகின்றேன். இருப்பினும் கொரோனா தொற்றின் அச்சுறுத்தல் முற்றுமுழுதாக இல்லாமல் போயிருக்கும் சூழல் உருவாகியும் ஒழுங்குபடுத்தப்படாத மீன் சந்தைகள் ஊர் முழுக்க பரவலாக காணப்படுகின்ற விடயம் பொதுமக்களின் விசமத்திற்கும் ஆட்சேபனைக்கும் வழிவகுக்கின்றது. பொருளாதார நெருக்கடியில் நாளாந்த செலவீனங்களை கூட சமாளிக்க முடியாதவர்களாக பெரும்பான்மையான மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் ஊர் முழுக்க சிதறிக் காணப்படும் மீன் சந்தை மிகப் பெரும் சுமையாகவும் பழுவையும் ஏற்படுத்த உள்ளது. இது ஏறக்குரைய எல்லா மக்களாலும் பேசப்படுகின்ற விடயமாக மாறியுள்ளது.

எனவே கௌரவ தவிசாளர் அவர்களே, உங்களது தலைமையிலான இப் பிரதேச சபையின் நிர்வாக ஆட்சிக் காலம் ஏறக்குரைய 5 வருடங்களை எட்டிய நிலையில் இன்றோ அல்லது நாளையோ கலைக்கப்படலாம் என நாம் எதிர்பார்க்கின்றோம். கௌரவ தவிசாளர் அவர்களே நாம் இப் பிரச்சினைக்கு தீர்வு கான தவறுவோமாயின் தாங்கள் மாத்திரமன்றி தான் உட்பட அனைத்து கௌரவ உறுப்பினர்களும் கூட பொதுமக்களால் மிக மோசமாக விமர்சிக்கப்படலாம். எனவே கௌரவ தவிசாளர் அவர்களே இப் பிரச்சினைக்கு துரிதமாக தீர்வினைப் பெற்றுக் கொடுக்கக்கூடியது அவசியம் என நான் உணருகின்றேன். கௌரவ தவிசாளர் அவர்களே இந்த விடயம் சம்மந்தமாக சாதாரண பாமர மக்களின் சாபத்திற்கும் மன வேதனைக்கும் ஆளாகியிருக்கின்றோம். காரணம் உதாரணமாக ஒரு விடயத்தை கூற விரும்புகின்றேன். மீன் சந்தை ஒரே இடத்தில் இருக்குமாக இருந்தால் இந் நிலை ஏற்படுவதற்கு சாத்தியம் மிகக் குறைவு. இறக்காமத்தில் இருந்து செல்வன் மீனை கொள்வனவு செய்கின்றவருக்கு ஒரு கிலோவிற்கு 400.00 ரூபா தொடக்கம் 450.00 ரூபா வரைதான் முடிகின்றது. அவ்வாறாக கொள்வனவு செய்வதாக இருந்தால் ஒருவர் 40 கிலோ மீனை கொள்வனவு செய்து சம்மாந்துறையில் விற்பனை செய்வதாக இருந்தால் இன்றய நிலைப்படி ஒரு கிலோ மீன் 1000.00 ரூபா. ஏறத்தாள அவரது செலவீனங்களை கழித்து 20,000.00 ரூபா ஒரு தரத்து வியாபாரத்திலே இலாபம் பெறுகின்றார்.

அதே போன்று கடந்த வாரம் அதே இடத்தில் இடம்பெற்ற சம்பவம் சுங்கான் மீன் 03 வியாபாரிகள் விற்பனை செய்து கொண்டிருந்தார்கள். அதிலே ஒரு வியாபாரியிடம் நான் மீன் கொள்வனவு செய்தேன். ஒரு கிலோ மீன் 1000.00 ரூபாவுக்கு வாங்கினேன். நான் வாங்கும் போது 03 வியாபாரிகள் சுங்கான் மீன் விற்றுக் கொண்டிருந்தார்கள். 10, 15 நிமிடம் கழித்து என்னுடைய மாமா அவ்விடத்தில் 1400.00 ரூபா கொடுத்து ஒரு கிலோ மீன் வாங்கினார். காரணம் ஒருவருடைய மீன் முடிந்துவிட்டது. 2 பேர்

மீன் விற்பனை செய்து கொண்டிருந்ததால் அவர்கள் நினைத்தமாதிரி மீன் விற்பனை செய்து கொண்டிருந்தார்கள். இன்றைக்கு ஒரு நாள் முழுதாக வயலில் வேலை செய்து வரம்பு கொத்துவது, விதைப்பது போன்ற ஏதாவது வேலை செய்து அந்த குடும்பத்தவர் எடுக்கக் கூடிய உச்ச சம்பளம் 2000.00 ரூபா. அவருடைய குடும்பத்தில் மனைவி உட்பட 5 பிள்ளைகள் இருந்தால் ஒரு கிலோ மீன் வாங்க வேண்டும். ஒரு கிலோ சுங்கான் மீன் 1400.00 ரூபாவுக்கு வாங்கினால் ஏனைய அன்றாடத் தேவையை எவ்வாறு அவர் பூர்த்தி செய்வார். இது இன்றைக்கு இந்த ஊரில் சாதாரண பாமர மக்கள் அன்றாடம் தொழில் செய்கின்ற மக்களின் பாரிய ஒரு மன வேதனையாக இருக்கின்றது.

இந்த விடயம் சம்மந்தமாக நாம் ஒரு தீர்க்க தரிசனமான ஒரு முடிவு கௌரவ தவிசாளர் அவர்களே உங்களது தலமையில் இன்று எடுத்தே ஆக வேண்டும். இதன் உச்சம் என்னவென்று சொன்னால் ஒரு மீனவர் சமுதாயத்தை கட்டுப்படுத்த முடியாத ஒரு நிர்வாகமாக ஒரு சமூகமாக இந்த ஊர் மாறியிருக்கின்றது. கட்டுப்படுத்த முடியாத மீனவர் சமூகம் உள்ள ஊராக மாறி இருக்கின்றது. இது எதிர்காலத்தில் இந்த ஊரை நல்ல எண்ணத்தோடு சிந்திக்கின்ற இளைஞர்களின் உள்ளத்தில் பாரிய ஒரு மன வேதனையை உருவாக்கியிருக்கின்றது. இளைஞர்கள் மத்தியிலும் இந்த சபை மத்தியிலும் இந்த ஊர் மத்தியிலும் இந்த ஊரின் நிர்வாகங்கள் மத்தியிலும் பாரிய அங்கலாய்பு ஏற்பட்டிருக்கின்றது. கடந்த வெள்ளிக்கிழமை அன்று அல்மர்ஜான் பாடசாலைக்கு முன் உள்ள நடைபாதையில் படங்கை விரித்து ஒரு வடியில் மீனை எடுத்து வந்து கொட்டி விற்பனை செய்கின்றார்கள். பாடசாலை மாணவர்கள் வருகின்றார்கள் மாறி போகக்கூடிய சந்தர்ப்பங்களும் இல்லை இரண்டு பக்கமும் வாகனங்கள் இப்படியான சம்பவங்கள் மீன் விற்பதிலே இருக்கின்றது. ஆகவே இன்றைக்கு ஏறத்தாள 15 இடங்களுக்கு மேல் மீன் சந்தை இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த விடயத்தில் பல தடவை பேசியிருக்கின்றோம். ஆனால் இதற்கு தீர்க்கமான ஒரு இடம் வேண்டும். முதலில் மீன் சந்தை ஒன்றை புரம்பாக அமைப்பது என்றால் ஒரு மத்தியமான இடம் வேண்டும். ஹிஜ்ரா சந்தியை எடுத்துக் கொண்டால் அங்கு எல்லோரும் மீன் வாங்க வரலாமா என்ற ஒரு கோசம். கொச்சிக்காய்தூளர் சந்தியை எடுத்துக் கொண்டால் அங்கு யார் செல்வது என்ற ஒரு கேள்வி, கைகாட்டியை எடுத்தால் அது ஒரு மூலை. விலைக் கட்டுப்பாடு நமக்குள் இல்லை. அதைப் பற்றி நாம் விவாதிப்பதில் பிரயோசனம் இல்லை. விலைக் கட்டுப்பாட்டை தவிர ஒரு மத்திய இடம் மீன் வியாபாரத்திற்கு நாம் எப்படியான இடத்தை தெரிவு செய்து ஒதுக்கலாம். ஹிஜ்ரா சந்தை அங்கு வசதி இல்லை மலையடிக்கிராமத்திலும், சென்னல் கிராமத்திலும் இருந்து ஹிஜ்ரா சந்திக்கு வருவதா என்று ஒரு கேள்வி. நம்மிடம் கையிருப்பில் இருக்கின்ற இடங்கள் கல்லரிச்சலில் பழைய மடுவம். சென்னல் கிராமத்தில் சந்தை வளவு, கொச்சிக்காய் தூளர் சந்தி, வாடகைக்கு எடுக்கக்கூடிய இடம் என்றால் ஒரு காலத்தில் மீன் சந்தை இருந்தது Cooperative வளவிற்குள். அதுவும் கூட பொருத்தமான இடமா? இடம்தான் பிரச்சினை ஒரு இடத்தை ஒதுக்கினால்தான் ஒரு சட்டத்தை உருவாக்கலாம் வேறு இடத்தில் மீன் விற்க இயலாது என்று கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நமது ஹிஜ்ரா சந்தி சந்தைக்குள் இடம் இல்லை என்று யார் சொன்னது? அங்கு மீனே இல்லையே. ஹிஜ்ரா சந்தி சந்தையை நாம் மெது மெதுவாக மூடிக் கொண்டு வருகின்றோம் என்பதை விளங்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் முதலாவது விடயம் மீனை சந்தைக்குள் கொண்டு வருவதுதான். இன்றைக்கு அந்த சந்தைக்குள் விற்பனை செய்கின்ற ஏனைய வியாபாரிகள் பாரிய மன உருகலில்தான் இருக்கின்றார்கள். மீன் வாங்க வருகின்றவர்கள்தான் ஏனைய பொருட்களை வாங்கலாம். மார்கெட் இற்குள் மீன் இல்லை என்றால் அங்கு ஒருவரும் செல்வதில்லை. அத்தனை கடைக்காரர்களும் அவர்களுடைய அன்றாட ஜீவனோபாயம் பாரிய கஸ்டத்துக்கு மத்தியில் தான் அங்கு கடை வைத்திருப்பவர்களின் நிலை காணப்படுகின்றது. எனவே, முதலாவது பழைய மாதிரி அந்த சந்தைக்குள் மீன் வியாபாரத்தை கொண்டுவர வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கொண்டு வருவதற்கு ஒரே ஒரு வழி மார்க்கட் இனை தவிர வேறு இடங்களில் மீன் விற்க இயலாது என்ற ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். அப்படி ஒரு முடிவு எடுத்தால் தான் நாம் உத்தியோகபூர்வமாக தெரிவிக்கலாம் இது தடை செய்யப்பட்டுள்ளது என்று கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் கூறுகின்ற மாதிரி மீனை மார்கெட் இற்குள் கொண்டு வந்தால் தானாகவே விலைவாசி குறைவடையும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

ஆரம்பத்தில் ஹிஜ்ரா சந்தை வியாபாரம் செய்பவர்களுக்கு போதாது. இதுவும் ஒரு காரணம் விலைவாசியும் ஒரு காரணம். இன்றைக்கும் வெட்டுமீன் சந்தைக்குள்தான் வருகின்றது. மற்ற மீன்கள் வருவதில்லை என்னவென்றால் ஒன்று வியாபாரிகள் அதிகரித்து விட்டார்கள். அவ்விடத்தில் 20 பேர் வியாபாரம் செய்யலாம். அதற்கு மேல் செய்ய இயலாது. ஆரம்பத்தில் ஒரு பிரச்சினை வந்தது பைசிக்கிள்களை உள்ளுக்கு வைத்திருப்பது. பைசிக்கிள்களை வெளியே எடுப்பதற்கு ஒரு காவலாளி வைத்து செய்தது. கொவிட் நோயினால் வெளியே சென்றவர்கள் அதற்கு பின்னர் வரவில்லை. தற்போது மாற்று இடம் ஹிஜ்ரா மார்கெட், கொச்சிக்காய்தூளர் சந்தி, சென்னல் கிராம மார்கெட் வளவு போன்ற இடங்களை தவிர வேறு இடங்களில் மீன் வியாபாரம் செய்யக்கூடாது என்ற முடிவை எடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மீன் வியாபாரிகள் ஒரு இடத்தில் நிறுத்தாமல் Mobile Service செய்யலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் பிரச்சினை என்னவென்றால் Mobile Service இல் சென்று விற்பனை செய்யாவிட்டால் ஒரு இடத்தில் நிறுத்தி கொட்டி விற்கின்றார்கள்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நாம் 03 இடங்களை மையப்படுத்தலாம். எமது ஊர் பரந்த ஊர். ஹிஜ்ரா சந்தையையும், சென்னல் கிராம சந்தை வளவினையும், பழைய மடுவத்தையும் எடுக்கலாம். இங்கு இருந்து கைகாட்டி சந்திக்கு மீன் வாங்குவதற்கு செல்வாரானால் ஏன் அவருக்கு மடுவத்திற்கு சென்று வாங்க இயலாது.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதே தீர்மானம் 55வது மற்றும் 52வது கூட்ட தீர்மானத்தில் எடுத்திருக்கின்றோம். எங்களுடைய கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் கூறியவாறு இந்த ஊர் பரந்த ஊர். இந்த ஊரிலே 3, 4 மையங்களை உருவாக்கி அந்த மையங்களில் இருந்து அந்த வேலைத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற வேண்டுகோள். இதே பிரேரணையை 55வது கூட்டத் தொடரிலும் நான் முன்வைத்தேன். அதற்காக வந்த அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவே வந்தது. இருந்தாலும் இதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த தீர்மானத்தை எடுத்ததன் பின்னர் நான் DIG இடம் நேரடியாக சென்று அதை நடைமுறைப்படுத்த வேண்டும். வேறு வழியில்லை.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஊர் பரந்த ஊராக இருப்பதனால் ஒரு இடத்தில் மாத்திரம் மட்டுப்படுத்தாமல் ஹிஜ்ரா சந்தை, பழைய மார்க்கெட், சென்னல் கிராமத்தில் சந்தைக்காக ஒதுக்கப்பட்ட இடமும், பழைய மடுவ பிரதேசம் இந்த 04 இடங்களையும் தெரிவு செய்தால் நல்லது என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பழைய மடுவ பிரதேசத்தில் இதை கொண்டு செல்வதற்கு தயங்குவது ஏனென்றால் அந்த பிரதேசத்தில் நமது அஸ்ரப் நூலகம் ஒரு சிறிய அறையில் இருக்கின்றது. அப் பகுதி வளர்ந்து வருகின்ற இடம். தற்காலிகமாவது ஏதாவது செய்து அதற்குள் மாற்ற வேண்டும். மாற்றி அவ்விடத்தில் ஒரு Study Center உருவாக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கைகாட்டி சந்தியில் ஒரு சனசமூக நிலையம் இருக்கின்றது. அதை ஆரம்பித்து வைத்தோம். அல்லது மாற்று இடமாவது கைகாட்டியை சார்ந்த இடத்திலும், ஹிஜ்ரா சந்தி, பழைய மார்கெட், சென்னல் சந்தை வளவையும் இதற்காக மாத்திரம் ஒதுக்கினால் பரவலாக நான்கு பகுதியிலும் மீன் விற்பனை செய்யலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களிடம் கேட்கின்றேன். பழைய இறைச்சிக் கடை இருந்த இடத்தில் ஒரு புரம் வளவு ஒன்று இருக்கின்றது. நாம் உத்தியோகபூர்வமாக வளவை வாடகைக்கு எடுத்து தற்காலிக கூடாரம் அமைத்து அதை விற்பனை நிலயமாக மாற்றினால் என்ன?

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதுவும் பொருத்தமான இடம் தான். இது சம்மந்தாமக 4, 5 மாதமாக பேசி வருகின்றோம். ஆனால் இதற்குரிய தீர்மானம் திடகாத்திரமாக எடுக்கப்படவில்லை. இதற்கு இன்று திடகாத்திரமான தீர்மானத்தை எடுக்க வேண்டும். தீர்மானத்தை எடுத்தால் விலைவாசியை அவர்களே குறைப்பார்கள்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது சம்மந்தமாக பல தடவைகள் கதைத்திருக்கின்றேன். பொதுவாக நாம் தனியாரின் இடத்தை எடுக்கும் போது அந்த இடம் Demand ஆகின்ற நேரம் அதை மீளப்பெறுவதற்குதான் யோசிப்பான். பொதுவாக Vehicle Park உடன் சேர்ந்த மாதிரி மீன் சந்தை உருவாக்குகின்ற இடம் என்றால் வாடகைக்கு கொடுத்து எடுப்பது என்றால் MPCS இனை தான் எடுக்கலாம். பழைய மார்கெட் இல் அவர்களாகவே பாதையில் மீன் வியாபாரம் செய்து மக்கள் இல்லாததனால் அது நிராகரிக்கப்பட்டது. 200 ரூபாவுக்கு மீன் வாங்க வேண்டும் என்றால் 300 ரூபாவுக்கு பெற்றோல் அடித்து ஓட வேண்டும். பரவலாக சொகுசாக செய்ய வேண்டிய இடம். அதுமட்டுமல்லாமல் அங்கு வெடி சம்பவமும் இடம்பெற்றிருக்கின்றது. மற்ற இடங்களை பெறலாம் ஆனால் உடனடியாக மாற்றங்கள் வந்தால் மாற்று இடம் இல்லை.

எல்லோரும் கைகாட்டியை சென்று பார்த்தால் இன்னும் மடுவம் என்ற நினைவில் முழுக் கழிவும் கொட்டப்படுகின்றது. இதை எமது இடமாக விசாலமாக்க வேண்டும். கற்றல் கற்பித்தலுக்கு பொருத்தமான இடம். மார்கெட் விடயத்தில் ஏனைய ஊர்களில் இறைச்சிக்கு என்று ஒரு கட்டுப்பாட்டு விலையை தீர்மானிக்கின்றார்கள். எமக்கு 50 ரூபாத்தான் வருகின்றது என்றாலும் இந்த விடயத்தில் நாம் ஒரு தீர்மானம் எடுத்து செயற்பட வேண்டும். ஒரு கிலோ மா 320 ரூபா ஆனாலும் ஒரு ரொட்டிக்கு 50 ரூபா விற்கின்றார்கள். வுநய 150 ரூபா விற்கின்றார்கள். நாம் சில விடயங்களில் தெளிவு ஒன்றை கொடுக்க வேண்டும். மக்கள் அவ்வளவு துன்பத்தில் இருக்கின்றார்கள். நாம் விலை நிர்ணயத்தை செய்து இதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
விலை நிர்ணயத்திற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் இல்லை. எல்லாரும் Publicity க்காக செய்வதை என்னை செய்விக்க வைக்காதீர்கள். நீங்கள் அறிவித்தல் கொடுப்பது என்றால் கொடுங்கள். கல்முனை எவ்வளவோ செய்தார்கள் இறுதியில் என்ன நடந்தது. ஒன்றும் நடைபெறவில்லை. இயலாத விடயத்தை சொல்லாதீர்கள் அதை செய்ய இயலாது.

மீன் வியாபாரத்தில் தெளிவாக முடிவு எடுத்து அந்தப் பொறுப்பை நான் எடுக்கின்றேன். ஹிஜ்ரா மார்கெட், மல்காம்பிட்டி வீதியில் தனியார் வளவை வாடகைக்கு எடுக்க இயலும் என்றால் எடுத்து அதற்குரிய நடவடிக்கை, கொச்சிக்காய்தூளர் சந்தி, சென்னல்கிராம சந்தை வளவு, பழைய மார்க்கெட் என்பவற்றை எடுத்து செயற்படுத்த வேண்டும்.

**தீர்மானம் - 04/57/12**
மீன் வியாபாரிகள் ஹிஜ்ரா மார்கெட், கொச்சிக்காய் தூளர் சந்தி, சென்னல் கிராம சந்தை வளவு, பழைய மார்கெட் மற்றும் மீயன்னா சந்தி வளவு கிடைக்குமானால் அந்த இடம் ஆகிய இடங்கள் தவிர வேறு இடங்களில் மீன் விற்பனை செய்வதை தடை செய்வதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சம்மாந்துறை தவிசாளர், நாவிதன்வெளி தவிசாளர், சம்மாந்துறை பிரதேச செயலாளர், நாவிதன்வெளி பிரதேச செயலாளர், GA அவ்வளவு பேரும் 1 மணிக்கு கூடுகின்றோம். நாவிதன்வெளி, இறக்காமம் சம்மாந்துறையில் இருந்தது. ஆனால் முறிகண்டிக்கும் வலுக்கம்மடுவுக்கும் இடையில் இருக்கின்ற பிரதேசம் சொறிக்கல்முனை – 02 இற்குரியது. நாவிதன்வெளி சம்மாந்துறையில் இருந்து பிரிந்து சென்ற நேரம் ஆயுதக் கலாசாரம் உச்ச கட்டத்தில் இருந்த நேரம் 2001 ஆம் ஆண்டு. அந்த நேரம் சம்மாந்துறையின் எல்லைக்குள் சொறிக்கல்முனை – 02 உள்வாங்கப்படுவதற்கு ஆயுதக்குழுவால் ஒரு

எதிர்ப்பு இருந்ததனால்தான் அந்த சொறிக்கல்முனை – 02 நாவிதன்வெளியுடன் இணைக்கப்பட்டது. அது உள்வாங்கப்படுகின்ற சம்மாந்துறை மக்களுக்கு சொந்தமான காணிகள். நாவிதன்வெளி பிரதேச சபையின் எல்லை Gazette பண்ணப்பட்டிருக்கின்றது. DS எல்லை Gazette பண்ணப்படவிலலை. என்னுடைய முன்மொழிவு என்னவென்றால் அதில் குடியாட்டம் என்று வருவது வீரச்சோலை. மற்றக் காணிகள் எல்லாம் சொந்தம் சம்மாந்துறை மக்களுக்கு. வீரச்சோலை கிராமத்தை நாவிதன்வெளியோடு வைத்துவிட்டு அந்தக் காணிகளை சம்மாந்துறை எல்லைக்குள் எடுத்தால் இரண்டு பக்கத்திற்கும் பிரச்சினை இல்லை. வீரச்சோலை மக்களின் விருப்பம் இல்லாமல் நாவிதன்வெளியில் இருந்து சம்மாந்துறைக்குள் எடுப்பதில் நியாயம் இல்லை.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சிமுஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சாதாரணமாக தகப்பனின் கீழ் இருக்கின்ற காணியை பிரித்துக் கொடுப்பதற்கு பிள்ளைகள் இருந்தால் அவர்களது ஒப்புதல் வேண்டும். சம்மாந்துறைக்கு கீழ் இருந்த பிரதேசத்தை சம்மாந்துறையின் ஒப்புதல் இல்லாமல் பிரித்துக் கொடுக்க இயலாது. முறிகண்டி அவர்களுக்கு எல்லை இல்லை. வலுக்கம்மடு நிலையான ஒரு இடம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வீரமுனை – 4 இன் எல்லை எப்பவும் முறிகண்டியாகத்தான் இருந்திருக்கின்றது. இதை பேசும் போது உண்மையை பேசி அதற்கு அப்பால்தான் வாதாட வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சிமுஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கிராம சேவகர் பிரிவிற்கு அப்படி செய்யப்பட்டிருக்கின்றது. அது ஒரு பிரதான DS Division நமக்குநிலையான ஒரு எல்லை வேண்டும். நெல்லிக்காட்டு ஆரப்பத்தை நிலையான ஆரப்பத்தை இல்லை. வலுக்கம்மடு ஓடைதான் நிலையான ஓடை. எதிர்காலத்தில் நாம் சென்றாலும் நிலையான எல்லையாக அதைத்தான் பார்க்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தற்போது யதார்த்த நிலை சொறிக்கல்முனையின் கிழக்கு எல்லை முறிகண்டி, வீரமுனை – 04 இன் மேற்கு எல்லை முறிகண்டி அது பொருத்தமா இல்லையா என்பது நமக்கு இல்லை. முறிகண்டிக்கும் வலுக்கம்மடுவிற்கும் இடையில் இருப்பது வீரச்சோலை குடியாட்டம். அந்த குடியாட்டத்துமக்களின் விருப்பம் இல்லாமல் எதுவும் செய்ய இயலாது. அது அவர்களின் அடிப்படை உரிமை. அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த சொறிக்கல்முனை கிராம சேவகர் பிரிவு. எஞ்சிய காணிகள் சம்மாந்துறைக்குள் வந்தால் பிரச்சினை இல்லை.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சிமுஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எத்தனையோ மீள்குடியேற்றங்கள் நடந்தும் வீரச்சோலையில் இருந்த மக்கள் அங்கு போய் சேரவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஏத்தாளக்குளத்தை இங்கு வைத்திருக்கின்றோம். நாம் சரியான தூரநோக்குள்ள சமூகம் என்றால் 2009 இற்கு முதல் ஏத்தாளக்குள பாடசாலை அங்கு போயிருக்க வேண்டும். நான் அந்த நேரம் சொன்னேன் ஏத்தாளக் குளத்தை கஸ்ஸாலியின் Primary ஆக்குங்கள். ஏத்தாளக்குள பாடசாலை இருந்த இடத்தில் கொண்டு செல்லுங்கள் என்று, ஒருவரும் போகமாட்டார்கள்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சில் இருந்து சென்ற மாதம் 26ஆந் திகதி அம்பாரை GA இற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது. அம்பாரை மாவட்டத்தில் 05 பிரதேச செயலகங்களுக்குரிய எல்லைகள் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை அதை Gazette பண்ணுவதற்காக உங்களது பரிந்துரைகளை தாருங்கள் 11ம் மாதம் 06 ஆந் திகதிக்கு முதல் அனுப்பி வையுங்கள் என்று GA இற்கு கடிதம் ஒன்று வந்திருக்கின்றது. அதில் நமக்கு சம்மந்தப்பட்டது நாவிதன்வெளி பிரதேச சபை எல்லை. இது வலுக்கம்மடு ஆறா அல்லது முறிகண்டியா என்று விவாதிப்பதை விட நீங்கள் சொன்ன மாதிரி வீரச் சோலையை சொறிக்கல்முனை யுடன் சேர்த்து ஏத்தாளக் குளத்தையும் 3000 இற்கும் மேல் நெற்செய்கை காணிகள் இருக்கின்றது. அவ்வளவு காணிகளின் ஆவணங்கள் சம்மாந்துறையின் கீழ் இருக்கின்றது. ஆனால் நிர்வாகம் நாவிதன்வெளியின் கீழ் இருக்கின்றது. நாவிதன்வெளிக்கு ஒரு பயளை பேமிட் எடுப்பது என்றாலும் அல்லது அறுவடையை விற்பனை செய்வதற்கு அனுமதி எடுப்பது என்றாலும் பொதுபோக்குவரத்து கூட இல்லை 10 கிலோமீற்றருக்கு மேல் பயணம் செய்ய வேண்டி இருக்கின்றது.

இந்தக் காரணங்களை வைத்து எங்களுக்கு ஆறுகள் பிரச்சினை இல்லை. அவ்வளவு நெற்காணிகளின் நிர்வாகமும் சம்மாந்துறைக்கு கீழ் வர வேண்டும். ஏத்தாளக்குள கிராமம் மீள் குடியேற்றப்பட வேண்டும். மீள்குடியேற்றபடாமைக்குரிய ஒரே ஒரு காரணம் என்னவென்றால் இப்படி ஒரு கிராமம் இருக்கின்றது என்று இதுவரைக்கும் அரசாங்கத்திற்கு அறிவிக்கப்டாமல் இருந்தது. அந்த கிராமத்தை ஊடறுத்து செல்கின்ற வீரச்சோலை கிராமத்திற்குரிய சகல வசதிகளும் செய்யப்பட்டு இருக்கின்றது. இந்தக் கிராமம் இதுவரை மீள் குடியேற்றப்படாமல் இருக்கின்றது. அதற்கு ஒரு காரணம் அரசாங்கமாகவும் இன்னொரு காரணம் நில சொந்தக் காரர்களும் குடியேறுவதற்கு தயக்கம் காட்டுவது. 04 குடும்பம்தான் அங்கே வாழ்ந்து வருகின்றார்கள். ஆகவே இவ்வளவு நெற்காணிகளுக்குரிய நிர்வாக உரிமை சம்மாந்துறைக்கு கீழ் வரவேண்டும். ஏத்தாளக்குளக் கிராமமும் சம்மாந்துறைக்கு கீழ் வர வேண்டும். வீரச்சோலை கிராம மக்கள் விரும்பினால் சம்மாந்துறைக்கு கீழ் வரலாம் அல்லது சொறிக்கல்முனைக்கு கீழ் சேர்த்து விடலாம். நேற்றிரவும் கூட இது சம்மந்தமாக வேலைகள் செய்து கொண்டிருக்கின்றோம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சிவில் அமைப்புகள் இதில் உண்மையாக தலையிட வேண்டும். காலையில் கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்களிடம் வளத்தாப்பிட்டி எல்லையைப் பற்றி கதைத்தேன். ஒரு குறிப்பு ஒன்று தயாரிக்கப்போகின்றேன் பாராளுமன்றத்தில் Land Ministry Vote வருகின்ற நேரம் அதைப்பற்றி பேச வேண்டும் என்று. நமது பக்கத்தில் இருக்கின்ற விவாதம் என்னவென்றால் இவை எல்லாம் சம்மாந்துறையினால் நிர்வகிக்கப்பட்ட எல்லைகள். ஆவணங்கள் எல்லாம் சம்மாந்துறையில் இருக்கின்றது. எந்தந்த பிரதேசம் அவர்களின் ஆதங்கங்கள் உள்வாங்கப்படாமல் செய்யப்பட்டதோ அது பழைய நிலைக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது சம்மந்தமாக சகல ஆவணங்களும் சம்மாந்துறையின் கீழ் இருக்கின்றது. அவர்கள்தான் சகல வேலைகளும் செய்கின்றார்கள். வீரச்சோலையை விட்டுவிட்டு மற்ற காணிகளை சம்மாந்துறைக்கு கொண்டு வந்தால் கூடுதலாக எங்களது பகுதியில் உள்ளவர்கள் தான் வேளாண்மை செய்கின்றார்கள். சம்மாந்துறையின் கீழ் இருந்தால்தான் போக்குவரத்தோ சகலதும் இலகுவானது. வீரச்சோலை கிராமத்தை விட்டுவிட்டு மற்றதை எடுத்தால் பிரச்சினை இல்லை. நிர்வாகம் எங்கு இருக்கின்றது என்று தெரியாமல் இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களது மேசையில் வைக்கப்பட்டிருக்கின்றது Annual Implementation Programe 2022 PSDG வேலைத்திட்டம் அதில் பெயர் பட்டியலை இணைத்ததாக சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் அது இல்லை. வேலைகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தற்போதுதான் ஆரம்பிக்கப் போகின்றார்கள்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Amount எவ்வளவு?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எட்டு இலட்சம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கல்லரிச்சல் 2ஆம் பிரிவில் பளைய மடுவத்தைக்கு முன்பாக எஸ்-வாய்க்காலில், கடந்த ஒருவருடகாலமாக 3m மதகு ஒன்று செய்ய முடியாமல் மக்கள் மற்றும் மாணவர்கள் பிரயாணம் செய்ய முடியாமல் தற்போதும் வாய்க்காலுக்குள் இறங்கி ஏறி மழை வெள்ளத்தில் தத்தளிக்கின்றார்கள். ஆகையால், இந்த இடத்தில் 3m மதகு ஒன்று செய்வதற்கான ஏற்பாடுகளை செய்துதருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அது தனியார் பாதை. 05 குடும்பம் குடியிருக்கின்றது. தற்போது இருக்கின்ற நிலைக்கு அந்த தொகையை செலவளிப்பதுதான் பிரச்சினை.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அவர்களும் கஸ்டமான குடும்பங்கள்தான். அவர்கள் செலவளித்து செய்வதற்குரிய வசதி இல்லை. எங்களால் இயன்ற உதவிகளையும் செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் ஒரு காலமும் ஒருவரின் வேலைக்கும் தடையாக இருந்ததில்லை. இயலுமானதை செய்திருக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களை சந்தித்து இப்படி ஒரு விடயம் இருக்கின்றது. செய்து தருகின்றீர்களா? அல்லது நீங்கள் சபையில் பேசுகின்றீர்களா? அல்லது நான் சபையில் பேசவா? அல்லது சபையில் பேசி தீர்மானம் எடுப்பதா? சபையில் பேச வேண்டாம் நான் செய்து தருகின்றேன் என்று கூறினீர்கள். எல்லோரும் இதை எப்படியாவது செய்து தருவதற்குரிய முயற்சி ஒன்று செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை 12 சந்திக்குழந்தை சந்தியில் இருந்து Cooperative வீதி அண்மையிலே I Road Project இனால் காபட் இடப்பட்டிருக்கின்றது. ஆனால் வீரமுனை வீதியில் இருந்து சந்திக்குழந்தை சந்தி நோக்கி வருகின்ற பாதை அங்கே ஒரு வடிகான் அமைக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் மக்களிடத்திலே இருந்தது. ஆனால் அவர்களுடைய கோரிக்கையை பாதை நிறுத்தியதாக எண்ணி உடனடியாக சந்திக்குழந்தை சந்தியில் இருந்து 180 மீற்றர் தூரமான பாதை காபட் இடாமல் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது. அந்த மக்கள் மழைகாலத்திலே படுகின்ற அவலங்கள் ஏறாளம். அதனை கருத்திற் கொண்டு உரிய தரப்போடு இச் சபையின் சார்பாக அவசரமாக செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளை விடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால் அம்பாரை பிரதான வீதியில் இருந்து பதஹ் பள்ளிவாசால் ஊடாக சந்திக்குழந்தை சந்தி வரைக்குமான வீதி காபட் இடப்படுவதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பித்திருக்கின்றார்கள். அந்த வேலையோடு இணைத்து இந்த வேலையையும் செய்து முடிக்க வேண்டும் என்ற வேண்டுகோளோடும்,

அதே போன்று அம்பாரை 12ம் வீதியிலே நான் உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்ட நாளில் இருந்து அந்த வடிகானிலே மிக மோசமான முறையிலே வீடுகளில் இருந்து கழிவு நீர் விடப்பட்டிருக்கின்றது. ஆனால் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அமைக்கப்பட்டிருக்கின்ற பாலத்தின் தடையின் காரணமாக அங்கே வருகின்ற நீர் ஓட முடியாமல் தேங்கி நிற்கின்றது. அதன் காரணமாக மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றார்கள். மழைகாலத்தில் கூட டெங்கு மற்றும் ஏனைய நோய்களுக்கு ஆளாகுகின்ற ஒரு நிர்ப்பந்தத்திற்கு அம் மக்கள் இருக்கின்றார்கள். குறிப்பாக எமது சபையினாலும் பல தடவைகள் அதை துப்பரவு செய்திருக்கின்றோம். ஆனால் அது திருப்தியான நிலையில் இல்லை. அவ் வடிகானின் சில் உடைந்து இருப்பதனால் நீரோட்டம் சரியாக ஓட முடியாமல் இருக்கின்றது. இதற்கு பணம் ஒதுக்கீடு செய்தாவது அந்த வேலைத்திட்டத்தை மக்களுக்கு ஏற்றவாறு செய்து முடிக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும், அதே போன்று வீரமுனை சந்தியிலே சவளக்கடையை நோக்கிச் செல்கின்ற பாதை இரு மருங்கிலும் குழி தோன்றப்பட்டு இருக்கின்றது. நான் அவதானித்த வகையில் இரண்டு வாகனங்கள் ஒன்றுக்கொன்று மோதக்கூடிய சந்தர்ப்பத்தை எனது கண்ணால் அவதானித்தேன். எதற்காக தோன்றப்பட்டிருக்கின்றது என்று எனக்கு தெரியாது. இருந்தாலும் அச் சந்தியில் இரு மருங்கிலும் தோன்றப்பட்ட குழி மூடப்பட வேண்டும். அந்த மக்களுக்கு எந்தவித தடங்களும் இல்லாமல் பிரயாணிக்கக்கூடிய வசதியை இச் சபை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் முதலில் மன்னிப்புக் கோர வேண்டும். ஏனென்றால் சென்ற சபை நடைபெற்றதில் எனக்கு திருப்தி காணாது. ஒரு மாதத்திற்குரிய விடயத்தை ஒரு மணித்தியாலயத்திற்குள் கதைத்து முடிக்க இயலாது. கௌரவ தவிசாளருக்கு அதிகமான பொறுப்புக்கள் இருந்தால் பின்னேரம் சபையை கூட்டிருக்கலாம் அல்லது வேறு நாட்களில் கூட்டிருக்கலாம். 04 விடயம் சம்மந்தமாக இங்கு கதைக்க வந்திருக்கின்றேன். நான் இரு கிழமைக்கு முன்பாக பிரதேச சபைக்கு வந்த போது ஒரு மனிதர் ஓடி வந்து எங்களது எல்லைக்கு ஒருவர் வந்து கம்பு வைத்து சென்றுள்ளார். எனக்கு அறிவித்தல் தரவில்லை என்ன என்று கேட்டதற்கு அவ்விடத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இல்லாமல் நான் நினைக்கின்றேன் Trainees ஆக இருக்கின்றவர்கள் தான் அந்த கம்பை வைத்திருக்க வேண்டும். இங்கு வருகின்றவர்களுக்கு முனவ்வர் TO இயல்பாகவே மென்மையானவர். இங்கு வருகின்றவர்கள் அதிகமான கூச்சலிட்டு, சத்தமிட்டு காரியாலயத்திற்கு வருகின்றார்கள். அவர்களை சமாளிப்பதற்கு ஜெசீர் TO அல்லது முஸ்தபா TO இரண்டு பேரில் ஒருவர் கட்டாயமாக 05 நாட்களும் இருக்க வேண்டும். முனவ்வர் TO வை மற்ற

யாராவது ஒருவருடன் Field இற்கு அனுப்பிவிட்டு மிக முக்கியமாக ஜெசீர் TO அல்லது முஸ்தபா TO காரியாலயத்தில் இருக்க வேண்டும்.

அதே மாதிரி மல்லிகை தீவு மக்கள் நீர் இணைப்பு பெறுவதற்காக முச்சக்கரவண்டியில் ஒப்பம் பெற வருகின்றார்கள். ஆனால் இங்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இல்லை. தற்காலத்தில் முச்சக்கரவண்டிக்கு செலவு எவ்வளவு போகின்றது என்று தெரியும். அங்கு இருந்து வருவது என்றால் நான் நினைக்கின்றேன் 2000.00 ரூபா கேட்பார்கள். அம் மக்கள் அந்த காசை எங்கு இருந்து எடுப்பார்கள். இந்த நிர்வாகம் ஒரு தடவைக்கு இரண்டு தடவை ஏமாற்றினால் என்ன செய்வார்கள். அந்த மக்கள் அன்றைக்கு அன்றைக்கு உழைத்து சாப்பிடுபவர்கள். இதை நாங்கள் கட்டாயமாக கவனத்தில் எடுக்க வேண்டும்.

இரண்டாவது விடயம் கௌரவ தவிசாளரின் தலைமையின் கீழ் கௌரவ உறுப்பினர்களின் அனுமதியோடு Tender சம்மந்தமாக எனக்கு அனுமதி தந்தீர்கள். ஆனால் நான் Tender Opening மாத்திரம்தான் பிரதேச சபையில் செய்கின்றேன். பொருட்கள் எங்கு கொள்வனவு செய்யப்படுகின்றது? எந்த இடத்தில் கொள்வனவு செய்யப்படுகின்றது? எவ்வாறு கொள்வனவு செய்யப்படுகின்றது என்று எதுவுமே எனக்கு தெரியாது. நாளைக்கு உங்களையும் இதற்கு போட்டது தானே இதற்கு காரணம் சொல்லுங்கள் என்று இந்த சபையில் இருக்கின்ற கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் என்னிடம் கேள்வி கேட்பார்கள். இதற்கும் எனக்கு பதில் இல்லை.

அடுத்த விடயம் இது எமது 04வது வருடம் முடிந்து 05வது வருடம் வரைக்கும் நாங்கள் இந்த சபையில் இருக்கின்றோம். ஆனால் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றது. தீர்மானங்கள் அனைத்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்ற சொல்தான் வந்து கொண்டிருக்கின்றதே தவிர அது நடைபெற்றதா இல்லையா என்று 04 , 05 கூட்டங்களுக்கு முன்னும் தீர்மானங்கள் எடுப்பட்டிருக்கின்றதா? எடுக்கப்பட்டிருந்தால் தீர்மானம் என்ன என்றால் அதற்கு மாத்திரம் பதில் வரும் எடுக்கப்படவில்லை என்றால் ஏன் எடுக்கப்படவில்லை அதற்கான காரணம் என்ன என்பது இன்னும் வந்து சேரவில்லை. எங்களுடைய காலத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் செய்யப்பட்டவைகளா? செய்யப்படவில்லை என்றால் என்ன காரணம் என்று அடுத்த சபையில் இருக்கலாம் இல்லாமல் போகலாம். இருந்தால் எங்களுக்கு அதற்குரிய காரணத்தை தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அதற்கு உதாரணம் என்னவென்றால் பெண்கள் சிறுவர்களுக்கு இங்கு ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்று உள்ளூராட்சி ஆணையாளரிடம் இருந்து கடிதம் வந்ததற்கு இன்னும் அது செய்யப்படவில்லை. அது சம்மந்தமாக இந்த சபையில் கேட்ட போது எங்களது கௌரவ தவிசாளர் அவர்கள் கூறினார்கள் நம்பிக்கையாளர் சபையை கூட்டத்திற்கு அழைத்து அது சம்மந்தமாக செய்வோம் என்று. ஆனால் இற்றைவரைக்கும் நடைபெறவில்லை. அதற்கு காரணம் என்ன என்று எனக்கு தெரியாது.

அடுத்தது கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் சொன்னமாதிரி சிரமதானம் மரநடுகைகள் பற்றி எங்களுக்கு அறிவித்தலாக வரவில்லை என்று நான் நினைக்கின்றேன்.

கௌரவ உறுப்பினர் நிலவ்பாவின் தாயின் மரணத்திற்காக ஒரு நிமிட அஞ்சலி செலுத்த வேண்டும். அதைத் தொடர்ந்து தவிசாளர் கூறியதற்கிணங்க எல்லைப் பிரிப்பினை சபை ஊடாக செய்யலாம் என கூறிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஒவ்வொரு பொறுப்புகளும் தரப்படுகின்ற போது அதை உள்வாங்க வேண்டும். Tender Opening இற்கு ஒரு கௌரவ உறுப்பினர் அங்கத்தவராக இருப்பது என்னவென்றால் அது திறக்கப்பட்டு Seal பண்ணப்பட்ட பின்னர் மாற்றம் செய்ய இயலாது. ஒரு அங்கத்தவர் Tender Opening இல் இருப்பது வந்தது எல்லாம் திறக்கப்பட்டிருக்கின்றதா அதில் இருக்கின்ற விடயங்கள் ஒழுங்காக இருக்கின்றதா அதன் பின்னர் Procument Process வேறு. அதற்கும் Tender Opening இற்கும் தொடர்பு இல்லை. Tender Opening இந்த தகவல்கள் உண்மையானது என்று அத்தாட்சிப் படுத்துவது. இதில் உங்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று இல்லை.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 8ம் மாதம் நடைபெற்ற கூட்டத்திலே சனசமூக நிலையங்கள் சம்மந்தமாக சுட்டிக்காட்டி இருந்தேன். இதுவரையும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் சம்மாந்துறை பாடசாலை மாணவர்கள் விளையாட்டுத் துறையிலே தற்போது பிரகாசித்துக்

கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு Table Tennis, Bedminton, கராட்டி போன்ற பயிற்சிகளிலே மாவட்ட மட்டத்திற்கு தெரிவாகி மாகாண மட்டத்திற்கு செல்கின்ற வீரர்களுக்கு பயிற்சி பெறுவதற்காக எமது விளையாட்டுக் கட்டிடத் தொகுதியிலே இலவசமாக ஏற்பாடு செய்து வழங்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இலவசம் என்பதில் யாராவது Certify Authority இருக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Certify Authority பாடசாலை அதிபர்கள் தான்.

### தீர்மானம் - 04/57/13

Table Tennis, Badminton, கராட்டி போன்ற விளையாட்டுக்களில் மாவட்ட மட்டத்திற்கு தெரிவாகி மாகாண மட்டத்திற்கு செல்கின்ற வீரர்களுக்கு உறுதிப்படுத்தல் கடிதத்துடன் (அதிபரின்) ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியில் இலவசமாக பயிற்சி பெறுவதற்கு அனுமதி வழங்குவதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப்லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று 05 வருடத்தை எட்டிக்கொண்டிருக்கின்ற நேரத்தில் இந்த வரவு செலவுத்திட்ட முன்மொழிவு சபையில் முன்வைக்கப்பட்டது. காலாகாலமாக ஏகமனதாக ஏற்றுக்கொண்டு வருகின்றோம். அந்த அடிப்படையில் ஒவ்வொரு வருடமும் நேர ஒதுக்கீடு செய்யப்படுகின்ற நேரத்தில் முக்கியமான விடயங்கள் முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதே நேரத்தில் 2018 ஆம் ஆண்டு என் மூலமாக முயற்சிகள் செய்யப்பட்டு ஹிஜ்ரா முதலாம் வீதி 80 இலட்சம் ரூபா செலவில் காபட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட வீதியின் ஹிஜ்ரா 2ம் வீதியில் முடிவடைகின்ற இடத்தில் ஏற்பட்ட உடைவை திருத்தம் செய்து தருமாறு சபையிடம் கேட்டேன். கடிதம் மூலமும் தெரிவித்திருந்தேன். இந்த முறையாவது அது திருத்தம் செய்யப்பட வேண்டும். இந்த வருடமும் நிதிப் பிரச்சினை இருப்பதாக தாங்கள் கூறியிருந்தீர்கள். அதற்குள் இதனை செய்து முடிப்பது மேலதிக செலவீனங்களை எதிர்காலத்தில் இல்லாமல் செய்ய உதவும் என்பது எனது கருத்தாக இருக்கின்றது.

இங்கு எமது கௌரவ உறுப்பினர்கள் எல்லோரினுடைய பேச்சின் மூலமும் சம்மாந்துறையின் அரசியல் அதிகாரங்கள் அற்ற நிலையில் இந்த சபையின் இந்த ஊரின் முதல்வராக தாங்கள் இருக்கின்ற நேரத்தில் அலுவலகங்கள் ரீதியாகவும் தனிப்பட்டவர்கள் ரீதியாகவும் பலதரப்பட்ட அடிப்படையில் இந்த ஊர் சின்னாபின்னாப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் தாங்கள் தங்கள் மீது இந்த ஊரும் கௌரவ சக உறுப்பினர்கள் அனைவரும் வைத்திருக்கின்ற நம்பிக்கையின் வெளிப்பாடாகத்தான் இடை நடுவில் விடப்பட்ட உங்களது அதிகாரத்தை கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் சுட்டிக்காட்டியதற்கு ஒரு படி மேல் சென்று நான் எனது கைப்பட எனது கடித தலைப்பில் இந்த ஊரின் முச்சபைகளுக்கு எழுதிய போது இந்த ஊரில் அரசியல் அதிகாரங்கள் இல்லை. எஞ்சியுள்ள ஒரே ஒரு அரசாங்கம் இந்த சபைதான். ஆகவே அதற்கு பொருத்தமானவர் எங்களது கௌரவ தவிசாளர் என்பதை உறுதிப்படுத்தி கூட்டத்தை கூட்டி நகர மண்டபத்தில் ஏற்பாடு செய்ததை நான்தான் என்று இந்த இடத்தில் வெளிப்படுத்துகின்றேன். அந்த நேரத்தில் என்னைப் பார்ப்பதற்காக கூட இந்த சபையின் அங்கத்தவர்களின் ஆதரவாளர்களும் வந்திருந்தார்கள். பார்க்கக்கூடிய சூழ்நிலையும் இருந்தது. சமயோசனமாக மாற்றம் பெற்றதை நான் அறிகின்றேன். எனவே இந்த ஊரின் முதல்வராகிய உங்கள் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாக இழக்கப்பட்டுக்கொண்டிருப்பதை நான் மாத்திரமல்ல இருக்கின்ற அனைத்து கௌரவ உறுப்பினர்களும் விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள். மனவேதனையில் புழுங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

இங்கு பேசப்பட்ட மீன் சந்தை வியாபாரமாக இருந்தாலும் சரி, எல்லை நிர்ணயமாக இருந்தாலும் சரி எதுவாக இருந்தாலும் மிகவும் வேதனைப்பட்ட நிலையில்தான் ஒவ்வொரு கூட்டத்திற்கு சமூகமளிக்கின்றோம். அந்த நேரத்தில் எங்களது ஒருமித்த கருத்தின் பயனாக அந்த முடிவைக் கொண்டுதான் தவிசாளராகிய நீங்கள் முடிவெடுத்து செயற்படுகின்றீர்கள். அதே நேரத்தில் இந்த முடிவை மாற்றக் கூடிய அதிகாரமும் எதையும் துனிந்து தற்துணிவோடு செய்கின்ற அதிகாரமும் கௌரவ தவிசாளருக்கு உள்ளூராட்சி மன்றம் மூலம் சட்டமூலம் தந்திருக்கின்றது. அப்படிப்பட்ட அதிகாரங்களை தன்னகத்தே வைத்திருக்கின்ற தாங்கள் பிரதேச செயலாளருக்கோ அல்லது நீர்ப்பாசன

பொறியலாளருக்கோ யாருக்குமோ இடம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இங்கு பேசப்பட்டதனால்தான் அவர்களை சுட்டிக்காட்டுகின்றேன். அவர்கள் மாத்திரமல்ல தனிப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் நெஞ்சை நிமிர்த்தி முள்ளந்தண்டை நிமிர்த்தி இந்த ஊரின் கௌரவத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கின்றது. எதற்கும் சாட்டுப் போக்கான எந்தவிதமான அசமந்தமான முடிவுகளும் வரக்கூடாது. அந்த அடிப்படையில் பாதைகளுக்கு பெயரிட வேண்டும் என்று பல காலமாக நாங்கள் இந்த சபைக்கு வருவதற்கு முதல் இருந்து கௌரவ சபை முயற்சி எடுத்தது. ஆனால் இதுவரையில் முடியக்கூடிய தருவாயில் இருக்கின்றது. உங்களின் பெரும் முயற்சியால் ஏற்பட்டது. அதற்கு நான் இந்த சபை சார்பாக நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1978 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் போக்குவரத்து முஸ்லிம் கலாசார பண்பாட்டு அலுவலக அமைச்சராக இருந்த மர்ஹூம் எம்.எச்.முஹம்மட் அவர்கள் இருக்கின்ற காலகட்டத்தில் 1400 ஹிஜ்ரி ஆண்டு நிறைவை கொண்டாட வேண்டும் என்ற தேசிய ரீதியான கொண்டாட்டத்தில் தான் இந்த ஹிஜ்ரா சந்திக்கு ஹிஜ்ரா சந்தி என்றும் பொலிஸ் வீதிக்கு அது பொலிஸ் வீதி அல்ல ஹிஜ்ரா வீதி என்றும் ஹிஜ்ரா புரம் என்றும் மட்டக்களப்பில் இருந்து கொழும்பிற்கு புகையிரதத்தை நடுநிசியில் ஏற்படுத்தி அம் மக்களுக்கு காலை நேரத்தில் அலுவலகத்திற்கு சென்றுவிட வேண்டும் என்பதற்காக ஹிஜ்ரா Train என்றும் ஹிஜ்ரா Train இற்கு போவதற்காக அம்பாரையில் இருந்து ஹிஜ்ரா பஸ் என்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதே நேரத்தில் நான் மன வேதனைப்படகின்றேன். ஹிஜ்ரா சந்தி இருக்கின்றது இந்த சந்தியின் நாமம் என்றும் வியாபிக்கின்றது. விஷேடமாக அம்பாரை மாவட்டத்தில் எமது ஊரை பெருமையாக எங்களது இடங்களை அடையாளப்படுத்துகின்ற ஒரு இடமாக அது அமைந்திருக்கின்றது.

ஆகவே சம்மாந்துறைக்கு வெளியூர் நபர் வந்தாலும் மிகவும் எளிதாக பாதைகளை அறியக்கூடியதாக இருப்பதற்கு ஒரே ஒரு காரணம் ஹிஜ்ரா வீதி என்றும், மல்காம்பிட்டி வீதி என்றும், கல்முனை வீதி என்றும், அம்பாரை வீதி என்றும் இருப்பதனால்தான். அதற்காகத்தான் ஹிஜ்ரா 1, 2, 3, 4, 5 என்றும் மல்காம்பிட்டிக்கு தொடர் இலக்கமும், கல்முனை பாதைக்கு தொடர் இலக்கமும், அம்பாரைக்கு தொடர் இலக்கமும் இடப்படுகின்றது. ஆகவே பெயர் மாற்றங்கள் அதிகமாக செய்யலாம், தாராளமாக செய்யலாம். இறந்தவர்களுக்கும் செய்யலாம், இருப்பவர்களுக்கும் செய்யலாம். ஆனால் இந்த 04 வீதிகளிலும் யாருடைய இறந்தவர்களின் பெயர்களை வைக்க வேண்டிய அவசியம் இல்லை. வெளியூரில் இருந்து வந்தால் அல்லது தபால் காரன் நான் தபால் திணைக்களத்தை சேர்ந்தவன் ஒரு கடிதம் வந்தால் ஹுசைன் வீதி என்றால் எங்கு தேடுவது. ஹிஜ்ரா 1 என்றால் தபால் காரன் உரிய இடத்தில் கொண்டு கொடுப்பான். ஆகவே 4 வீதிகளுக்கும் தனிப்பட்டவர்களின் பெயர்களை முன்வைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பது எனது கருத்து மாத்திரமல்ல இந்த கௌரவ உறுப்பினர்கள் 20 பேரின் முன்னிலையில் இந்த கருத்ததை முன்வைக்கின்றேன். அதைக்கொண்டு எங்களது கௌரவ தவிசாளர் முடிவெடுப்பார் என்ற நம்பிக்கையும் இருக்கின்றது. ஆகவே மேலும் விடயங்கள் இருக்கின்றது ஏனைய அங்கத்தவர்களும் பேச இருப்பதால் எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற மாதமும் பேசுவதற்காக வந்தேன். ஆனால் பேசமுடியவில்லை. நான் குடியிருக்கும் விஷவைத்தியர் சுல்தான் பாதையானது உங்களிடம் எத்திவைத்துள்ளேன். இந்தப் பாதையை செய்வதற்காக முயற்சி எடுத்த போது கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் நான் கொண்டு வந்திருக்கின்றேன் அந்தப் பாதையை செய்வதற்கு என்று கூறினார். அதே நேரம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் VC இஸ்மாயில் சேர் சொன்னார்கள் நான் அதை செய்யப்போகின்றேன் என்று, உங்களிடம் பேச வந்த நேரம் சொன்னீர்கள் இரண்டு மூன்று பேரின் Project இல் வந்திருக்கின்றது அவர்கள் செய்வார்கள். இதில் கவனம் செலுத்த வேண்டாம் என்று கூறினீர்கள். உண்மையாக மனவேதனை இது சம்மந்தமாக உங்களிடம் கண்ணால் கூட காட்டியிருக்கின்றேன் அந்தப் பாதையை, அந்தப் பாதை குன்றும் குழியுமாக மக்கள் பயணம் செய்வதற்கு கஸ்டமாக இருக்கின்றது. அந்த பாதையின் வளைவில் வீட்டுக்கு கொடுக்கப்பட்ட மின்சார இணைப்பு தூண் இருக்கின்றது அதை எடுக்க வேண்டும் என்று பல தடவைகள் சொன்னேன். உடனே அதை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் என்று இதுவரைக்கும் செய்யப்படவில்லை. அதில் ஏற்படுகின்ற பாதை விபத்துக்களில் இருந்து நீங்கள் தூரமாக இருக்கப்பட வேண்டியவர்கள் நான் அண்மையில் இருப்பவள் என்னையும் அதில் சேர்த்துக் கொண்டுதான் இவள் எல்லாவற்றுக்கும் முட்டுக்கட்டையாக இருக்கின்றாள் என்று மற்றவர்கள் பேசுவது எனது காதில் கேட்கும் போது மன வேதனையாக இருக்கின்றது. நான் மட்டும் அனுபவிப்பது இல்லை அந்தப்பாதையால் கூடுதலாக விவசாயிகள் செல்லும் பாதை. கைகாட்டிச் சந்தியில் இருந்து சகல இடங்களுக்கும் செல்லக்கூடிய பாதை. இந்தப் பாதையை நான் உங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றாலும், மக்களின் சரீர

உழைப்பு தேவை என்றாலும் அதை நான் ஏற்படுத்தித் தருகின்றேன் அந்தப் பாதையை சீர் திருத்தித் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இரண்டாவது விடயம் கல்வியில் எங்களுக்கு ஒரு பங்களிப்பு இருக்கின்றது. முஸ்லிம் மத்திய மஹா வித்தியாலய பாடசாலை முன்னர் போன்று கல்வியில் அக்கரை இல்லாமல் ஆசிரியர்கள் செயற்படுகின்றார்கள் என்று அதிகமான பிள்ளைகளிடம் இருந்து நான் கேட்டிருக்கின்றேன். அங்கு கல்வி கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் மாணவர்கள் வெளிக்கள வகுப்புக்கு செல்வது என்று உதாசீனமாக நடந்து கொள்கின்றார்கள். வெளிக்களப் பாடத்து கவனம் எடுக்கும் ஆசிரியர்கள் பாடசாலை வகுப்பில் இருக்கும் மாணவர்களுக்கு அவர்களது நேரத்தை செலுத்தி கவனம் எடுக்காமல் இருக்கின்றார்கள். இதனால் இந்தப் பிள்ளைகளுக்கு ஓய்வு என்று இல்லை. ஏனென்றால் பாடசாலை முடிந்து 03 மணிக்கு வீட்டுக்கு வந்து சேருகின்றார்கள். சாப்பிட்டுவிட்டு அடுத்தாக வகுப்பு என்று ஓடுகின்றார்கள். வகுப்பு முடித்து வந்து பாடசாலை பாடங்களை எழுத வேண்டும் என்று சொல்கின்றார்கள். அந்தப் பிள்ளைகளின் மூளைக்கு மனதிற்கு அமைதி இல்லை. எத்தனையோ பிள்ளைகள் மனநோயினால் வைத்தியசாலையில் வந்து இருப்பது இதுதான் காரணமாக இருக்கின்றது. பகுதி நேர வகுப்பு நடாத்துவதை ஏன் எங்களால் குறைக்க முடியாது? கட்டுப்படுத்த முடியாது நாங்கள் இதை கல்வி அமைச்சருக்கு கூட அறிவிக்கலாம்.

மத்திய மஹா வித்தியாலயத்திலே வருகின்ற வருடத்தில் OL, AL எழுதும் மாணவர்களின் முறைப்பாடுகளை கேட்கும் போது மிகவும் கவலையாக இருக்கின்றது. அந்தப் பிள்ளைகள் படும் கஸ்டத்தை என்னுடைய கண்ணால் கண்டிருக்கின்றேன். எனவே பகுதி நேர வகுப்பு நடாத்துவதை முற்றாக நிறுத்தினாலும் நல்லது என்று நினைக்கின்றேன். இன்றைக்கு மன நோயாளியாக இளம் பிள்ளைகள் சம்மாந்துறை, கல்முனை, மட்டக்களப்பு வைத்தியசாலைகளுக்கு தாய்மார் அழைத்துச் செல்கின்றார்கள். வைத்தியசாலைக்கு அழைக்க இயலாத பிள்ளைகளை மறைமுகமாக வீடுகளில் வைத்தியர்களை அழைத்துச் செல்கின்றார்கள். மனநிலை வைத்தியர் ஒருவர் என்னை தொடர்பு கொண்டு சம்மாந்துறையில்தான் அதிகமான பிள்ளைகள் மனநோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இதில் எல்லோரும் கவனம் செலுத்தி பிள்ளைகளின் எதிர்கால கல்வி நமது ஊரின் வித்திட்ட ஒரு அபிவிருத்தியாகும். இதற்கு நாம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

சூழல் சுற்றாடல் மாசுபடுவது சம்மந்தமாக உண்மையிலே மிகவும் வேதனைக்குரிய விடயம் இவள் ஏன் அடிக்கடி கூறுகின்றால் என்று, நான் அடிக்கடி பிரயாணம் செய்வதால் காலையிலும், மாலையிலும், இரவிலும் இது கண்ணால் பார்த்த காட்சி எங்களது ஊழியர்கள் சிலர் பாதையில் குப்பைகளை எடுக்கின்றார்கள் சுத்தம் செய்கின்றார்கள் என்று நினைக்கின்றோம். நிச்சயமாக இல்லை. வாகனத்தை எங்கேயோ ஒரு இடத்தில் போட்டுவிட்டு அவர்கள் அவர்களின் சொந்த சொந் வேலைக்கு செல்வதை கண்ணால் கண்டிருக்கின்றேன். அதிகமான குப்பை பேக்களை நாய்கள் இழுத்துச் செலவ்தையும் நான் கண்ணால் கண்டிருக்கின்றேன். இந்த ஊர் மாசடையக்கூடாது என்று தான் பல தடவை நாமும் இச் சபையில் தீர்மானம் எடுத்து அவர்களுக்கான சீருடை வசதி, அவர்களுக்கான மேலதிக கொடுப்பனவு சகல வசதிகளையும் ஏற்படுத்தி இருக்கின்றோம். பாதையில் குப்பைகள் விழுந்து கிடந்தால் அதை எடுப்போம் என்று அவர்களின் மனோநிலையில் வருகின்றது இல்லை. காலால் அடித்துவிட்டு போனதையும் நான் கண்டிருக்கின்றேன்.

எனக்கு சந்தர்ப்ப சூழ்நிலை Video எடுக்க இயலாமல் போய்விட்டது. மிகவும் மனவருத்தவமாக இருக்கின்றது. சூழல் மாசடைகின்றது என்றால் நாங்கள் எல்லோரும்தான் பொறுப்பு. அது எமது Kitchen இல் இருந்து வரவேண்டும். படித்தவர்கள் செய்யும் தவறுதான் எல்லாவற்றையும் ஒன்றாக சேர்த்து வைத்து பாதைகளில் வீசுகின்றார்கள். மாட்டை அறுத்து தோலை கொண்டு போட்டுவிட்டு செல்கின்றார்கள். மீன் குப்பையை பாதையில் கொட்டுகின்றார்கள். தற்போது மழைகாலம் மக்களுக்கு டெங்கு, மலேரியா நோய் பரவுகின்ற நேரம். நான் எனது வீட்டுக்கு பின் உள்ள வாய்க்காலை இயன்றளவு சுத்தம் செய்திருக்கின்றேன். நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு எத்தனையோ கடிதம் கொடுத்திருக்கின்றோம். இதே போல் சகல பாதைகளும் நான் அண்மையில் சென்று கொண்டிருக்கும் போது ஹிஜ்ரா சந்திக்கு அப்பால் ஒருவர் வந்து குப்பையை எறிந்துவிட்டு செல்கின்றார். அவரிடம் கேட்டதற்கு சொல்கின்றார் நாங்கள் தானே காசு செலுத்துகின்றோம்தேவை என்றால் என்றால் தூக்கட்டும் என்று, இதற்கு நாங்கள் உரிய உத்தியோகத்தர்களை கண்கானிப்பவர்கள் அவர்களின் பின்னால் அரைமணித்தியாலயத்திற்கு ஒரு தடவை செல்ல வேண்டும்.

மன்னிக்க வேண்டும் இந்த விடயத்தை ஆரம்பிக்கும் போது நிறுத்தி இருக்கின்றீர்கள். பொதுமகன் பொதுமகள் என்ற பிரச்சினையில் மர்சூக்காவின் பிரச்சினையை பேசுவதற்கு நேரம் தர வேண்டும். பாதையை அமைப்பதோ பாதையை வழங்குவதோ எங்களது பிரதேச சபைக்கு உரிமையா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இல்லை. அரச காணியில் பாதை தீர்மானிக்கின்ற சக்தி பிரதேச சபைக்கு இல்லை.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பாதை சம்மந்தமாக நாங்கள் ஏன் பிரதேச சபை நீதிமன்றத்திற்கு போகச்சொல்லியோ , இந்தப் பாதையை வைக்க இயலாது என்று சொல்லியோ ஏன் நாங்கள் இவரை அடிக்கடி தொந்தரவு படுத்துகின்றோம். இதற்காகவேண்டி ஏன் நாங்கள் மூக்கை நுழைக்க வேண்டும். நீதிமன்றத்திற்கு போகச்சொல்வது பிரதேச செயலகத்திற்குதான் அனுமதி இருக்கின்றது. அவர்கள் இருவரும் சகோதரத்துவம். சகோதரத்துவத்தை ஒன்று சேர்த்து வைத்தோம் என்றால் அதில் நமக்கு நன்மை இருக்கின்றது. குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழு யாராவது சென்று முடிவ எடுத்த நேரம் குழுவுக்கு கிடைத்த பலன் என்ன. ஏன் இந்த பிரதேச சபை குழுவிற்கு மதிப்பு இருக்கின்றதா? இல்லையா? இந்தக் கடிதம் எங்களுக்கு வரக்கூடாது. இந்தக் கடிதம் வரும் போது எங்களது சபையை மட்டுமல்ல எங்கள் எல்லாரையும் உதாசீனப்படுத்துகின்ற மாதிரி அவமானப்படுத்துகின்ற மாதிரி இருக்கின்றது. நீங்கள் அவர்களை அழைத்து ஒரு முடிவு கண்டிருக்கின்றீர்கள். இவ்வளவு நாளும் இதைப் பற்றி பேசக்கூடாது என்றுதான் நினைத்தேன். இந்தக் கடிதம் வந்து வந்து தொல்லைப்படுத்துவது ஒருவகையில் எங்களது மனசாட்சிக்கும் விரோதமாக இருக்கின்றது. மக்கள் பிரதிநிதி என்றால் மக்கள் எல்லோரும் வருவார்கள் முறையிடுவார்கள். அதைப் பற்றி ஒரு குழு அமைத்தால் ஒரு தீர்மானத்தை எடுத்து அந்த அறிக்கையை நில ஆணையாளருக்கு அனுப்புங்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களே, இந்த விடயத்தில் சபை தெளிவாக அவர்கள் எழுதியகடிதங்களுக்கு இறுதிக் கடிதத்திற்கு கூட தெளிவான ஒரு முடிவை கொடுத்திருக்கின்றது. அந்த முடிவை ஏற்றுக் கொள்ளாமல் அவர்கள் உங்களுக்கு எழுதி அதை நீங்கள் பேசுவதனால்தான் இந்தப் பிரச்சினை தொடருகின்றது. ஒவ்வொரு கூட்டத்திலும் யாராவது எடுத்து வந்து பேசுகின்றீர்கள். அது பேசு பொருளாக இருக்கின்றது. சபைக்கு செய்யக்கூடியதைதான் செய்யலாம். அந்தக் குழு சென்று இதைப் பற்றி பல தடவை பேசியிருக்கின்றோம். குழுவுக்கும் சட்டத்திற்குள்தான் இயங்கலாம். இந்த விடயத்தைப் பற்றி திரும்ப திரும்ப எடுத்தவுடன் நான் தடுக்கின்றேன் என்று சொல்கின்றீர்கள். எந்தளவுக்கு என்றால் கௌரவ உறுப்பினர் யூசுப்லெப்பை அவர்கள் சபையில் பெரும்பான்மை தவிசாளரில் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்று சொல்கின்றார் இன்னும் கொஞ்ச காலத்துக்குதான். இந்தப் பிரச்சினையை சபையில் பேசாதீர்கள். அதை பேசுவதால்தான் மீண்டும் மீண்டும் கடிதம் வருகின்றது.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, குழு அறிக்கையை வைத்து இதை இரத்தாக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந்தப் பிரச்சினை முடிக்கப்பட்டுள்ளது. அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் மீண்டும் மீண்டும் கடிதம் அனுப்புகின்றார்கள். சபைதான் செய்ய வேண்டும் என்றால் சபை செய்ய இயலாது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 57 வது யாப்பின் 15வது பிரிவின் படி பாதை சம்மந்தமாக நமக்கு இல்லையா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது அரச காணி என்பதால்தான் இவை பேமிட் காணிகள். இந்தப் பாதை யாருக்குரியது என்று தீர்மானிப்பது பிரதேச செயலாளர். அது பிழை என்றால் நீதிமன்றத்திற்கு சென்றுதான் தீர்மானிக்க வேண்டும். பிரதேச சபை அதை தீர்மானிக்க இயலாது.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, செயலாளர் அவர்களும் தனிப்பட்ட ரீதியில் பாதிக்கப்படுகின்றார். அவர் தனிப்பட்ட ரீதியாக கடிதம் அனுப்புகின்றார் என்று மற்றவர்கள் கதைக்கின்ற அளவுக்கு வரக்கூடாது. எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து இனிமேல் இப்படியான கடிதம் வரக்கூடாது என்று சொல்ல வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் கடிதத்தை ஏற்றுக்கொள்ளாதீர்கள்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பாதைப் பிரச்சினை அவர்கள் நீதிமன்றத்திற்கு போகட்டும். Tower அடிப்பதற்குரிய அனுமதியை வழங்கலாம் தானே.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அனுமதி வழங்க இயலாது. அந்தக் கட்டிடத்திற்கு COC இருக்க வேண்டும். COC ஐ வழங்குவது யார் நான் கொடுக்க இயலாது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, COC கொடுக்க இருந்த நிலையில் தவிசாளர் தடை செய்திருக்கின்றார் என்றுதான் பிரச்சினை. ஏனென்றால் அந்த Procedure படி கட்டுப்படவில்லை. பாதை அகற்றுகின்ற நேரம் உடைத்து தர வேண்டும் என்று ஒரு நிபந்தனை வைத்து அந்த வேலையை செய்திருக்கின்றார்கள். ஆனால் COC இனை பெறுவதற்கு தவிசாளர் தடையாக இருக்கின்றார். அவர் அவரின் பாதை பிரச்சினை பார்த்துக் கொள்வார். நாம் 19 கௌரவ உறுப்பினர்கள் இருக்கின்றோம். விணயமாக கேட்டுக் கொள்கின்றோம் COC இனை பெற்றுக் கொடுப்பதற்கு உங்களால் இயன்ற உதவிகளை செய்யுங்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்கள் ஒன்று விளங்க வேண்டும். நீங்கள் எவ்வளவு சொன்னாலும் சட்டரீதியான முறையில்தான் நான் கையொப்பம் வைக்கலாம். COC என்பது Court இற்கும் சென்றும் Challenge பண்ணக்கூடியது. COC இல் என்ன சொல்கின்றோம் நாங்கள் சமர்ப்பிக்கப்பட்ட படத்தின் பிரகாரம் கொடுத்த அனுமதிக்கு வீடு கட்டப்பட்டுள்ளது. கொழும்பில் இருப்பவர்களுக்குதான் தெரியும். இதை TO உறுதிப்படுத்தி தற்போது என்னுடைய கையில் இல்லை. UDA Committee தீர்மானித்தால் செய்யலாம். அப்படி இல்லாத பட்சத்தில் அது Challenge பண்ணப்பட்டால் நான் சொல்ல இயலாது சபை தீர்மானம் எடுத்தது. நான் கையொப்பம் வைத்தேன் என்று சொல்ல இயலாது. Tower இற்கு பிரச்சினை வந்தது என்னவென்றால் சுற்றி இருப்பவர்களின் ஒப்புதல் இல்லாமல் செய்ய இயலாது. அதனால் தான் இந்த குடும்பப் பிணக்கும் வந்தது. நாசர் என்பவர் பிரதேச சபை தேர்தலில் எனக்கு வேலை செய்தவர். அவர் எனக்கு ஆதரவு அளித்ததற்காக நான் செய்ய வேண்டும் எதிர்பார்ப்பது பிழை.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எனது நீண்டநாள் ஆசை நீங்களும் அதில் முயற்சி எடுத்தீர்கள். நானும் அதில் விடாமுயற்சியுடன் தொடர்ந்து கொண்டிருந்ததால் NGO ஊடாக அந்த உதவி கிடைத்தது. எலபௌஜ என்ற இடத்தை கட்டியமைப்பதற்கு, அதற்கு சபையால் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந்த தீர்மானம் எடுக்கப்படுள்ளது. அந்தக் கடிதத்தை நாங்கள் தருவோம் NGO Fund பண்ணுவதற்கு தயார் என்றால் சபையால் அந்தக் கடிதத்தை தருவோம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சந்தை வியாபாரிகள் என்ற ரீதியில் மீன் வியாபாரத்தில் எங்களது கௌரவ உறுப்பினர் நிலுவ்பா அவர்களும் விளினியடி சந்தியைப் பற்றி அடிக்கடி சொல்லியிருக்கின்றார். முந்தநாள் நான் மகனோடு செல்லும் போது நான் விழுந்து காயம் ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டது. மீன் விற்றுக்கு இருந்த ஒருவர் கத்தியை ஓங்கும் போது நானும் வந்தேன். அந்த நேரம் நான் பின்னுக்கு செல்லாவிட்டால் அந்த இடத்தில் உயிரிழந்திருப்பேன். அந்த இடத்தில் கட்டாயம் சொல்ல வேண்டியது என்னவென்றால் PHI மார் சிலரை உள்வாங்கி அவர்கள் முன்வந்து மீன் விற்க வேண்டாம் என்று சொல்லி அதன் பின்னர் இலஞ்சம் வாங்கிவிட்டு மீன் விற்பனை செய்யுங்கள் என்று இல்லாமல் துரிதமான தீர்மானம் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதை நடைமுறைப்படுத்துவது எனது பொறுப்பு.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே எங்களது கௌரவ உறுப்பினர் நிலவ்பா அவர்களின் தாயாரின் மரணத்திற்காக ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இம் மாதம் என் தாயின் மரணச் செய்தி கேட்டவுடன் இந்த சபையில் இருந்து ஜனாசா வாகனமும், கதிரைகளும் தந்துதவிய கௌரவ தவிசாளர் மற்றும் செயலாளர் அவர்களுக்கு எனது குடும்பம் சார்பாக நான் நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன், நான் இல்லாத சந்தர்ப்பத்தில் வளத்தாப்பிட்டியில் உருவாக்கப்பட்ட வில் கழகம் மூலம் பயனாளிகளை தெரிவு செய்து அவர்களுக்குரிய பயிற்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதில் கடந்த வாரம் இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. அதற்கு எங்களது கௌரவ தவிசாளரின் அனுதியுடன் நான் முன்வைத்த பிரேரணையை ஏற்றுக்கொண்டு 06 மாத காலத்திற்கு பொதுச் சந்தையை இலவசமாகவும் மற்றும் சபை நிதியில் இருந்து ஒரு இலட்சத்திற்கும் குறைவான மூலப்பொருட்களை வழங்குவதற்கும் தற்போது பேசியிருந்தீர்கள். அதற்கு எங்களது வில் கழகத்தை ஆரம்பித்து வைப்பதற்கு ஊக்கப்படுத்திய NGO இன் நிதி மூலம்தான் இந்தப் பயிற்சியை ஆரம்பித்தோம். இதற்கு எங்களுக்கு அக்கரைப்பற்றில் இயங்கிவரும் AWF உம் உறுதுணையாக இருந்தது. அவர்கள இந்த சபைக்கு நிறுவனங்கள் சார்பாகவும் நன்றியை தெரிவித்துக் கொள்ளச் சொன்னார்கள். அதற்கு முதலாவது நான் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் ஒரு பிரேரணை கொண்டு வர வேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனால் அந்த நேரம் எனது தாயின் சுகயீனம் காரணமாக சபைக்கு நீண்ட நாட்களாக வராமல் இருந்ததால் அந்த பிரேரணை மூலம் இந்த சபையில் விடயத்தை எத்தி வைக்க தவறிவிட்டேன். ஏனைய விடயத்திற்குள் அதை பேசலாம் என்று நினைக்கின்றேன்.

நமது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக எல்லாக் குடும்பங்களும் பாதிக்கப்பட்டு வருகின்றது. அதில் குறிப்பாக வறிய குடும்பத்தில் வாழ்கின்ற மாணவிகளின் கல்வி நிலை பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணம் நாட்டில் இலவச சீருடை, இலவச புத்தகம், இலவசக் கல்வி, இலவச மருத்துவம் என்று வழங்கப்பட்டாலும் தற்போது நமது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக பாடசாலை மாணவர்கள் மாதவிடாய் காலங்களில் பாடசாலைக்கு செல்வது மிகவும் இடையூறாக இருக்கின்றது. ஆரோக்கிய துவாயின் விலை கூடிய காரணத்தினால் எமது சபை மூலம் கல்வி அமைச்சிற்கு ஒரு பிரேரணையை அனுப்பி பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடை, இலவச புத்தகங்கள் வழங்குவது போன்று தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிவர்த்தியாகும் வரையாவது பாடசாலை மாணவர்களுக்கான ஆரோக்கிய துவாயினை இலவசமாக வழங்குவதற்கு எங்களுடைய சபையினால் ஒரு பிரேரணையை கொண்டு சென்றால் நல்லது என்று எனது கருத்தை கூறுகின்றேன்.

காரணம் தோட்டத் தொழிலாளிகளின் பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வது மிகவும் கஸ்டம் அவர்களுக்கான போசாக்கான உணவு இல்லை, போசாக்காண மருத்துவம் இல்லை அப்படியான சூழ்நிலையில் ஒரு தாய் கொழுந்து ஆய்ந்து வந்து வீட்டின் வாழ்வாதாரம், பிள்ளைகளின் கல்வி எல்லாவிடயங்களையும் பார்க்கின்ற சந்தர்ப்பத்தில் முக்கிய தேவை என்பதில் அந்தப் பிள்ளைகளின் கல்வி நிலை பின் தங்கி இருக்கின்றது. தற்போது பாடசாலைகளில் பரீட்சைகள் நெருங்கிக் கொண்டிருக்கின்ற நிலையில் அதிகமான பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாமல் இருக்கின்றார்கள். இவ்வாறான துர்ப்பாக்கிய நிலையில் நமது நாடு இன்னும் மோசமான நிலை ஏற்பட்டாலும் கூட இவ்வாறான சின்ன சின்ன விடயங்களை எமது சபை மூலமாக கல்வி அமைச்சிற்கு ஒரு பிரேரணையை அனுப்பி இந்த உதவியை செய்வது என்னுடைய முயற்சி இருக்க வேண்டும் இந்த சபையின் அனுமதியும் வேண்டும் என்று கேட்டு இந்த சந்தர்ப்பத்தை தந்நததற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உண்மையாக அதைப் பற்றி பலர் யோசிப்பதில்லை. மாதவிடாய் காலங்களில் முக்கியமாக பாடசாலை மாணவர்கள் படுகின்ற கஸ்டம். நான் ஆயிரக்கணக்கான பெண் ஊழியர்களை வைத்து Factory நடத்தியவன். இதில் ஒரு ஆபத்து என்னவென்றால் இந்தப் பிரேரணையை மனிதாபிமான ரீதியில் வைக்கலாம். ஆனால் இப்படியான விடயங்களில் நிர்வாகிகளின் பங்களிப்பு வரும் போது அது வேறு பக்கமும் பாதிக்கப்படலாம். அந்தப் பிள்ளைகளை இனங்கண்டு உத்தியோகத்தர்கள்தானே வழங்க வேண்டும். அது சரியான முறையில் செய்யாவிட்டால் அது ஒரு பாரிய பிரச்சினையாக வரலாம் துஸ்பிரயோகத்திற்கு. அந்த ஆபத்தும் இருக்கின்றது. ஒரு தகப்பன் என்ற ரீதியில் அதை யோசித்தேன் கட்டாயம் இது கொடுக்க வேண்டும் ஆனால் கொடுக்கும் போது இது வயதிற்கு வந்த பிள்ளை என்று இனங்காண்பது மாதிரி இருக்கும். அந்தப் பக்கத்தையும் பார்க்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலவ்பா அவர்கள்:**
12 வயதிற்கு மேற்பட்ட மாணவிகள் என்று இனங்காணும் போது அதில் வயதிற்கு வந்தவர்களும் இருப்பார்கள். வயதிற்கு வராதவர்களும் இருப்பார்கள். அப்படி வழங்கினால் அதில் யார் என்று தெரியாமல் இருக்கும். பாடசாலையில் இருக்கின்ற பெண் ஆசிரியரின் மூலம் பொறுப்பு கொடுத்து செய்யலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் சொல்கின்ற காரணம் சரி. ஏதாவது ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று எல்லோரின் கருத்து இருக்குமானால் நாம் தீர்மானம் எடுக்கலாம்.

**தீர்மானம் - 04/57/14**
தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் வறிய குடும்பத்தில் வாழ்கின்ற பாடசாலை மாணவர்கள் மாதவிடாய் காலங்களில் ஆரோக்கிய துவாயின் விலையேற்றத்தினால் பாடசாலைக்கு செல்வது இடையூறாக இருப்பதனால் அதனை இலவசமாக வழங்குவது தொடர்பாக கல்வி அமைச்சிற்கு அறிவிப்பதற்கான தீர்மானம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலவ்பா |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

தீர்மானம் சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் நிலவ்பா அவர்களின் தாயாரின் மரணத்தை ஒட்டி இந்த சபையின் அனுதாபம் தெரிவிப்பதற்காக ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம்.

இத்துடன் சபை அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை

கௌரவ தவிசாளர்,
கௌரவ உப தவிசாளர் / கௌரவ உறுப்பினர்
சம்மாந்துறை பிரதேச சபை.

**கூட்டறிக்கை அனுப்புதல்**

கடந்த 2022.11.15 ஆந் திகதி இடம் பெற்ற எமது 04வது சபையின் 57வது அமர்வின் கூட்டறிக்கை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றது. இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இருக்குமாயின் எதிர்வரும் 2022.12.13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு கௌரவ தவிசாளரின் கட்டளைக்கமைய கேட்டுக் கொள்கின்றேன்.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை